பக்கங்கள்:-30

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 02 | சனிக்கிழமை | 15.06.2024 | அதிர்வு 319

## இரண்டு மாணவர்கள் கடலில் மூழ்கி மரணம்

நீர்கொழும்பில் கடலில் நீராடச் சென்ற இரண்டு பாடசாலை மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

நீர்கொழும்பு பகுதியில் உள்ள தமிழ் பாடசாலையொன்றில் தரம் 11 06

### ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில்

# ஜுலை 21 ஆம் திகதி நிலைப்பாட்டை பகிரங்கமாக அறிவிப்பாராம் ரணில்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பான பகிரங்க அறிவிப்பை எதிர்வரும் ஜுலை 21 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிடுவார் என்று ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று 2 வருடங்கள் நிறைவு பெறும் நாளில் (ஜுலை 21) தேர்தலில் போட்டியிடும் பகிரங்க அறிவிப்பை அவர் வெளியிடுவார். இது தொடர்பில் கட்சிக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் அறிவிப்பு வெளியான பின்னர் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நிலைப்பாடு 06



### இலங்கையில் தமிழர் பகுதிகளில்

# சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு உதவுகின்றது மோடியின் பா.ஜ.க.

### ==== கஜேந்திரன் எம்.பி. குற்றச்சாட்டு ====



**இந்தியாவின் பாரதிய ஜனதா கட்சி இலங்கையின் தமிழர் பகுதிகளில் சிவசேனை அமைப்பின் ஒத்துழைப்புடன் சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு உதவிகளை வழங்கி வருகின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.** 06

### காத்தான்குடியில் துப்பாக்கியால் பெண்ணைத் தாக்கி விட்டு

## தங்க ஆபரணங்களைக் கொள்ளையடித்த கொள்ளையன் 3 மணிநேரத்தில் சிக்கினார்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தில் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டு அந்தத் துப்பாக்கியால் குடும்பப் பெண் ஒருவரைத் தாக்கி 20 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பாக 3 மணிநேரத்தில் 43 வயதுடைய கொள்ளையனைக் காத்தான்குடிப் 06




அரசின் சட்ட சிக்கல் ஒன்று குறித்து மூத்த – பழைய – சட்டத்தரணி ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தேன்.

அந்தக் காலத்துப் பழுத்த சினிமா ரசிகர் அவர். எம்.ஜி.ஆர்., சிவாஜி காலப் பாடல்கள் எல்லாம் அவருக்கு அத்துபடி.

நான் சில தினங்களுக்கு முன்னர் 'புரியாமல் பேசத் தொடங்கி விட்டான். பெரிய மனிதனாகி விடுவான்!' என்ற வசனத்தை 'தங்கப்பதக்கம்' படத்தில் சோ பயன்படுத்துவதை என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அது அவருக்கு பிடித்து போயிற்று. சிலாகித்துக் கருத்து கூறினார். 06






# காடழிப்பில் ஈடுபடுபவர்களை ‘ட்ரோன்கள்’ மூலம் வனப்பாதுகாப்புத் திணைக்களம் கண்காணிக்கும்

காடழிப்பு தொடர்பில் கண்காணிப்பதற்காக ட்ரோன்களை பயன்படுத்தவுள்ளதாக வனப்பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

முதற்கட்டமாக 7 மாவட்டங்களில் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வனப்பாதுகாப்பு ஆணையாளர் நிஷாந்த எதிரிசிங்க குறிப்பிட்டார்.

இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, அம்பாறை, முல்லைத்தீவு, மொனராகலை, மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலேயே இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக விசேட பயிற்சி பெற்ற அதிகாரிகளுடன் ட்ரோன்கள் பயன்படுத்தப்படவுள்ளன என வனப்பாதுகாப்பு ஆணையாளர் நிஷாந்த எதிரிசிங்க குறிப்பிட்டார்.

இதன் மூலம் மரம் வெட்டுதல், அனுமதியற்ற பயிர்ச்செய்கைகள் மற்றும் கஞ்சா வளர்ப்பு உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த முடியும் என நிஷாந்த எதிரிசிங்க தெரிவித்தார்.

# பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ள நிதி இல்லை!

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

ஆசிரியர் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு கல்வி அமைச்சின் அனுமதி கோரப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தெரிவித்துள்ளார்.

எனினும், ஆசிரியர் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட வடமத்திய மாகாண பட்டதாரிகளை ஆசிரியர் சேவையில் இணைத்துக்கொள்வதற்கு நிதி இல்லை என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அவர்களை சேவையில் இணைத்துக்கொள்வதாக இருந்தால், அமைச்சரவையின் அனுமதி பெறப்பட வேண்டும் என கல்வி அமைச்சின் செயலாளர் திலகா ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.




மேற்படி பட்டதாரிகள் சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டால், சம்பளக் கொடுப்பனவுகளுக்காக 7000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை தேவைப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முட்டையின் விலை மீண்டும் அதிகரிப்பு



சந்தையில் முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது.

இதன்படி முட்டை ஒன்றின் விலை 55 – 60 ரூபா வரை அதிகரித்துள்ளதாகவும், சீரற்றகாலநிலை காரணமாகவே இந்த விலை அதிகரிப்பு எனவும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

சந்தைக்கு அதிகளவிலான முட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருவதால் முட்டையின் விலை மேலும் குறையும் என இலங்கைக் கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் அண்மையில் தெரிவித்திருந்தது.

இவ்வாறானதொரு பின்னணியிலேயே முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் மற்றும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

# மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.3 சதவீதமாக மேம்பட்டது



இந்த ஆண்டின் முதல் காலாண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.3 சதவீதமதாக வளர்ச்சியடைந்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 31,61,963 மில்லியன் ரூபாவாக பதிவான மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 33,29,583 மில்லியன் ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

2024ஆம் ஆண்டின் முதல் காலாண்டில், விவசாயத் துறை 1.1 சதவீதமாகவும், தொழில்துறை 11.8 சதவீதமாகவும், சேவைத்துறை நடவடிக்கைகள் 2.6 சதவீதமாகவும் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த 2 தொன் இஞ்சி மூடைகள் பறிமுதல்

## ராமேஸ்வரம் அருகேயுள்ள வேதாளைப் பகுதியில்



ராமேஸ்வரம் அருகே இலங்கைக்குக் கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 2 தொன் இஞ்சி மூடைகளை சுங்கத் துறையினர் கைப்பற்றினர்.

இராமநாதபுரம் மாவட்டம், ராமேஸ்வரம் அருகேயுள்ள வேதாளைப் பகுதியிலிருந்து இலங்கைக்கு சில பொருள்கள் கடத்தப்பட உள்ளன என மண்டபம் சுங்கத் துறைப் கண்காணிப்பாளர் பங்கஸ்குமார் சுக்லாவுக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அவரது உத்தரவின் பேரில், சுங்கத் துறை அலுவலர்கள் சத்தியமூர்த்தி, ராஜேந்திரன், மோகன், சந்திரசேகர், காளிமுத்து, ஜெயராஜ் ஆகியோர் வேதாளை, மரைக்காயர்பட்டணம் பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது கடற்கரையோரம் மறைவான இடத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த 40 சாக்கு மூடைகளை அதிகாரிகள் சோதனையிட்டனர். அவற்றில் 2 ஆயிரம் கிலோ இஞ்சியை இலங்கைக்கு கடத்துவதற்காக மறைத்து வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. இதையடுத்து, அந்த மூடைகளை அதிகாரிகள் கைப்பற்றினர். இந்தக் கடத்தல் முயற்சியில் ஈடுபட்டவர்கள் யார் என்பது குறித்து சுங்கத் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

# திருமலையில் டிப்பர் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

திருகோணமலை மாவட்டம், சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் – மயிலிமலை கல்லுடைக்கும் பகுதியில் டிப்பர் வாகனம் மோதி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சேனையூர், 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 21 வயதுடைய வி.விதுர்சன் என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார் என்று சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

இந்தப் பகுதியில் கருங்கற்களை ஏற்றிச் செல்கின்ற டிப்பர் வாகனமே மோதியுள்ளது என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்ட நிலையில், ஒரு டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்ட நிலையில் அதன் சாரதி சந்தேகத்தின் அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் தற்போது மூதூர் தள வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான விசாரணையை சம்பூர் பொலிஸார் மேற்கொள்கின்றனர்.



மரணமடைந்தவர் பிறவிக் குறைபாடு உடையவர் என்பதுடன் இறந்தவரின் சகோதரரும் சில வருடங்களுக்கு முன்னர் இவ்வாறான நிலையில் மரணமடைந்தார் என்று சம்பூர் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

# ஜுன் 30 ஆம் திகதியன்று நடைபெறும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பரீட்சை



அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I, II மற்றும் III ஆம் தரத்திற்கான பரீட்சைகள் நடத்தப்படும் திகதி தொடர்பான அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி இந்தப் பரீட்சை எதிர்வரும் ஜுன் மாதம் 30 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சைக்கு சுமார் 52 ஆயிரத்து 756 பேர் விண்ணப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த பரீட்சை நாடளாவிய ரீதியில் 353 நிலையங்களில் நடைபெறவுள்ளது.

மேலும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும், அதனைப் பெற்றுக்கொள்ளாத பரீட்சார்த்திகள் றறற.எடனையை.டம என்ற இணையத்தளத்தின் ஊடாக தங்களின் அனுமதி அட்டைகளைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# தபால் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பால் தேங்கிக் கிடக்கும் 15 லட்சம் கடிதங்கள்

தபால் சேவை ஊழியர்களின் பணிப்கிஷ்கரிப்பால் 15 லட்சத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் தேங்கியுள்ளன என தொழிற்சங்கங்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கடிதங்களை எதிர்வரும் 2 நாள்களுக்குள் விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக ஒன்றிணைந்த தபால் ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தின் மேலதிக செயலாளருடன் நேற்று முன்தினம் கலந்துரையாடிய போது எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன எனவும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் ஊழியர்களை சேவையில் இணைத்தல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளுக்கான தீர்வை வழங்க அரசாங்கத்திற்கு எதிர்வரும் 24 ஆம் திதி வரை கால அவகாசம் வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

24 ஆம் திகதியன்று ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுகள் வழங்கப்படாவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாகவும் ஒன்றிணைந்த தபால் ஊழியர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் சிந்தக்க பண்டார கூறியுள்ளார்.

தபால் ஊழியர்களின் 24 மணித்தியால தொழிற்சங்க நடவடிக்கை நேற்று முன்தினம் நள்ளிரவுடன் நிறைவுக்கு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# கொஹுவல முச்சந்தியில் வீதித்தடங்கல் மாற்று வீதிகளை பயன்படுத்த அறிவுறுத்தல்




கொஹுவல முச்சந்தியின் மேம்பால நிர்மாணப்பணிகள் காரணமாக அந்த வீதியூடான போக்குவரத்து 2 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்படவுள்ளது.

இன்று முதல் எதிர்வரும் ஓகஸ்ட் 15 ஆம் திகதி வரை இந்த வீதியூடான போக்குவரத்து மட்டுப்படுத்தப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஹொரணை மற்றும் கொழும்பு பிரதான வீதி பொதுப் போக்குவரத்து வாகனங்களுக்காக மாத்திரம் திறக்கப்பட்டிருக்குமெனவும் ஏனைய வாகனங்கள் மாற்றுவீதிகளில் பயணிக்க வேண்டுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இந்த வீதியூடாக பயணிக்கும் கனரக வாகனங்கள் கொஹுவல பாலம் ஊடாக உட்பிரவேசிப்பதற்கும் தடை விதிக்கப்படவுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் கொஹுவல முச்சந்தி ஊடாக ஹொரணை - கொழும்பு பிரதான வீதிக்குள் பிரவேசிக்கும் வாகன சாரதிகளை இயலுமானவரை மாற்று வீதிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர்.






# இளைஞர் சமூகத்தின் பொதுக் கற்றலுக்கான கல்வித் தளம் ஜனாதிபதி தலைமையில் ஆரம்பம்

இலங்கை இளைஞர் சமூகத்துக்காக பொதுக் கற்றலுக்கான கல்வித் தளமான http://www.publiclearn.lk/ இனை உத்தியோகபூர்வமாக அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

Public Learn என்பது உலகின் முன்னணி பல்கலைக் கழகங்களில் இருந்து இலவச பாடநெறிகளை பயனர்களை வழிநடத்தும் ஒரு தளமாகும். இந்த தளமானது ரீஜண்ட் குளோபல் நிறுவனத்தால் இயக்கப்படுவதோடு இலங்கையில் இதனை அறிமுகப்படுத்த இங்கிலாந்தில் உள்ள புலம்பெயர் இலங்கையர்களால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை இளைஞர் சமூகத்தினருக்கான பொது கற்றல் தளத்தை (http://www.publiclearn.lk/) ஜனாதிபதி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய பொருளாதார மாற்றத்திற்காக இலங்கை டிஜிட்டல் மயமாக்கலுடன் வேகமாக முன்னேற வேண்டும் என்று தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“இலங்கை மக்களுக்கு இந்த பயனைப் பெற்றுக் கொடுத்தமைக்காக முதலில் கலாநிதி செல்வ பங்கஜ் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்று நாம் அறிவு நிறைந்த சமூகத்தில் வாழ்கிறோம். அந்தச் சமூகத்தில் போட்டித்தன்மையுடன் முன்னேறுவது அவசியம். கல்வியில் நாம் முன்னணி நாடாக இருப்பதால் இது கடினமான காரியம் அல்ல என்று நான் நம்புகிறேன்.

தற்போது கல்வித்துறையில் உள்ள குறைபாடுகளை சீர்செய்யும் பணியில் ஈடுபட்டு வருகிறோம். இந்தப் புதிய திட்டம் அதற்கு நல்ல பங்களிப்பை வழங்கும். கலாநிதி கெவின் அத்தகைய திட்டத்தின் முக்கியத்துவத்தையும் அதன் நோக்கங்களையும் நன்கு விளக்கினார்.

எவ்வாறாயினும், ஒரு புதிய பொருளாதார மாற்றத்திற்கான நமது அணுகுமுறையில் மாற்றம் தேவை. நிச்சயமாக நம்மால் அதனை சாதிக்க முடியும்.

எதிர்காலத்தில் வகுப்பறைகள் மற்றும் சுவர்கள் இன்றி பாடசாலைக்கு வெளியிலான கற்றல் வாய்ப்புகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியிருக்கும். அவ்வறான திட்டமே இன்று தொடங்குகிறது.

வகுப்பறைகளில் திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் பற்றாக்குறை சவாலை சமாளிக்க இது ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று நான் நம்புகிறேன். மேலும், இந்த வேலைத்திட்டம் இலங்கை மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும், நாட்டில் டிஜிட்டல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் எனக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பாக இருக்கும்.

தற்போது கல்வியின் மூன்றாம் கட்டத்தை எட்டியுள்ளோம். அதாவது கல்வி முறையை டிஜிட்டல் மயமாக்கி அறிவை திறந்த தளத்தில் பயன்படுத்த வேண்டும். டிஜிட்டல் பொருளாதாரத்தில் கவனம் செலுத்தியுள்ளோம். அங்கு நவீன அறிவை பயன்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் அறிவைப் பயன்படுத்துவதன் மூலமே நாடு முன்னேற முடியும்.

21 ஆம் நூற்றாண்டின் பொருளாதாரம் என்ன என்பதை நாடாளுமன்றத்தில் உள்ள சிலர் புரிந்து கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவர்களுக்கும் சில வகுப்புகளை நடத்தலாம்” – என்றார்.






# கெஹலியவுக்கு விளக்கமறியல் மேலும் நீடிப்பு



தரமற்ற இம்யூனோகுளோப்ளின் தடுப்பூசி இறக்குமதி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கெஹலிய உள்ளிட்ட 8 பேருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதியரசர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், கெஹலிய உள்ளிட்ட 8 பேரும் எதிர்வரும் 28ஆம் திகதி வரை மீள விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர

“நீங்கள் குறிப்பிட்டது போல சரியாக 50 ஆண்டுகளுக்கு முன்னர் 1974 ஜூனில் தான் அந்தப் படம் வெளி வந்தது. அதில் ஒரு பாடல் ‘சோதனை மேல் சோதனை போதுமடா சாமி’ கேட்டிருக்கின்றீர்களா?” என்று கேட்டார் அவர்.

நானும் ஓர் அந்தக் கால அரைச் சினிமாப் பைத்தியம்தான். அந்தப் பாடல் வரிகள் பாடம். அதனால் நான்கு வரிகளை எடுத்து விட்டேன். அவருக்குச் சந்தோஷம் பிய்த்துக் கொண்டு போனது.

“அந்தப் பாடலிலே இடையிலே ஒரு வசனம் வரும். அதுதான் நாங்கள் இப்போது பேசும் விடயத்துக்கு கனகச்சிதமாக பொருத்தமானது” - என்றார் அவர்.

எனக்கு விளங்கவில்லை. நாங்கள் தமிழரான தற்போதைய சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினத்திற்கு ஆறு மாத காலப் பதவி நீடிப்பு வழங்குவது பற்றிய சர்ச்சை குறித்துப் பேசிக் கொண்டிருந்தோம்.

அது தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய பரிந்துரை குறித்து வரும் 18ஆம் திகதி செவ்வாயன்று அரசமைப்பு கவுன்ஸில் ஆராயவிருக்கின்றது. அதிலிருந்து பத்து நாள்களில் அவர் ஓய்வு பெற வேண்டிய 60 வயதை எட்டுகிறார்.

ஆனால் அரசமைப்பு கவுன்ஸில் அந்தப் பரிந்துரையை சாதகமாகப் பரிசீலிக்காது என்று விடயம் அறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அது விடயத்தில் என்ன நடக்கும், ஜனாதிபதிக்கும் அரசுக்கும் யார் சட்ட ஆலோசனை கூறுவார்கள் என்று நான் கேட்டிருந்தேன்.

அதற்குத்தான் அந்தப் பாடலின் இடையே ஒலிக்கும் வாசகத்தில் பதில் இருக்கின்றது என்றார் அந்த வயதில் மூத்த சட்டத்தரணி. தாமே அந்த வாசகங்களை அதே பாடல் தொனியில் எடுத்துவிட்டார்.

“மாமா, காஞ்சுபோன பூமியெல்லாம் வத்தாத நதியைப் பார்த்து ஆறுதல் அடையும். அந்த நதியே காஞ்சி போயிட்டா.... துன்பப் படுறவங்க எல்லாம் அவங்க கவலையை தெய்வத்துக்கிட்ட முறையிடுவாங்க, ஆனா, தெய்வமே கலங்கிநின்னா - அந்த தெய்வத்துக்கு யாராலே ஆறுதல் சொல்ல முடியும்?”- என்று அந்தப் பாடலின் இடையே ஒலிக்கும் வாசகங்களை சொல் தவறாமல் ஒப்புவித்தார் அவர்.

“அரசாங்கத்தின் சட்டப் பிரச்சனைகளை எல்லாம் கையாள வேண்டியவர் சட்டமா அதிபர். இன்று அவரது பதவி நீடிப்பே சட்டச் சிக்கலில். வழமையாக அரசின் சட்ட சிக்கலுக்கு அவரிடம் போய் முறையிடுவர். இப்போது அவரின் பதவி நீடிப்பே சிக்கலில். அவர் யாரிடம் போய் முறையிடுவார்? அவரது பதவியின் பிரச்சினை குறித்து ஜனாதிபதியும் அரசும் யாரிடம் பரிந்துரை கேட்க முடியும்? அவரது பதவி நிலைச் சிக்கல் குறித்து அவரிடமே சட்ட ஆலோசனை கேட்பது தகுமா? ஆகவே ‘தங்கப்பதக்கம்’ பாடல் கேள்விதான் இதுவும்” - என்றார் அவர்.

எனக்குப் புரிந்த மாதிரியும் இருந்தது, புரியாத மாதிரியும் இருந்தது. உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது வாசகர்களே...?

## இரண்டு மாணவர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இல் கல்வி பயிலும் இரண்டு மாணவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

6 மாணவர்கள் நேற்றுக் காலை கடலுக்குச் சென்றிருந்த நிலையில், அவர்களில் இருவரே உயிரிழந்துள்ளனர்.

சடலங்கள் நீர்கொழும்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிங்கள பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

இலங்கையில் சிங்கள பௌத்தமயமாக்கல் இடம்பெற்று வருகின்றபோது, இந்தியாவின் பா.ஜ.கவின் விரிவாக்கமாக இருக்கின்ற சிவசேனையின் இலங்கை முகவர்கள், தமிழர்களின் நிலத்தை ஆக்கிரமித்துக் கட்டப்படுகின்ற பௌத்த விகாரைகளுக்கு அங்கீகாரம் கொடுக்கின்ற செயற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கின்றார்கள் என்றும் அவர் கூறினார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் மூன்றாவது பதவிக் காலத்தில் இலங்கைக்கு எவ்வாறான நிலைமை காணப்படும் என்று கஜேந்திரன் எம்.பியிடம் “பி.பி.சி. தமிழ்” கேள்வியெழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைத் தீவில் சிங்கள பௌத்த விரிவாக்கத்துக்கு எந்தவித இடையூறும் இல்லை. இந்தியா சிங்கள பௌத்த விரிவாக்கத்துக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கும், சிங்கள பௌத்த விரிவாக்கத்துக்குச் சீனாவிடம் செல்ல வேண்டிய கட்டாயம் இல்லை என்ற நம்பிக்கையை உருவாக்கி இலங்கையைத் தமது நட்பு சக்தியாக மாற்றுகின்ற செயற்பாடுகள் மாத்திரமே இடம்பெறுகின்றது என்றும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும், இந்தியா தமிழ் தேசத்தை அங்கீகரித்து தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் வகையில் சமஷ்டி அரசமைப்பை இலங்கையில் கொண்டு வர வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதற்காக இந்தியா எமது நட்பு சக்தியாக இருக்க வேண்டும் என நாங்கள் விரும்புகின்றோம் என்றும் கஜேந்திரன் எம்.பி. தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தங்க ஆபரணங்களைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பொலிஸார் கைது செய்தனர்.

புதிய காத்தான்குடி, அஹமட் லேனில் உள்ள வீடு ஒன்றில் ஆஸ்திரேலியாவில் உள்ள மௌலவி ஒருவரின் மனைவி சம்பவ தினமான நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் தனிமையில் இருந்துள்ள நிலையில் வீட்டினுள் துப்பாக்கியுடன் நுழைந்த கொள்ளையன் ஒருவன் ஆகாயத்தை நோக்கிச் சுட்டு விட்டு பெண்ணின் தலையில் துப்பாக்கியால் தாக்கிவிட்டு 20 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களைக் கொள்ளையடித்துக் கொண்டு தப்பியோடினார்.

கொள்ளையனின் தாக்குதலில் படுகாயமடைந்த 32 வயதுடைய சித்தீக் சிபானியா என்ற பெண்ணை அயலவர்கள் மீட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்த்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தடவியல் பிரிவுப் பொலிஸார் உடனடியாக வரவழைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதுடன் துப்பாக்கி ரவைகளும் மீட்டகப்பட்டன.

சம்பவம் இடம்பெற்று 3 மணிநேரத்தில் மேற்படி கொள்ளையன், கொள்ளையடித்த தங்க ஆபரணங்களுடன் காத்தான்குடிப் பகுதியில் வைத்துப் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

காத்தான்குடியைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டார். அவர் ஆரையம்பதி எல்லைப் பகுதியில் வசித்து வருபவர் என்று அவரிடம் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

அவரிடம் தொடர் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும், அவரைப் பொலிஸ் தடுப்பில் வைத்து விசாரணை செய்வதற்காக நீதிமன்ற அனுமதி பெறப்படவுள்ளது என்றும் காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர்

## ஜூலை 21ஆம் திகதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அறிவிக்கப்படும். கட்சி கூடி உரிய வகையில் - உரிய முடிவை எடுக்கும்.” - என்றார்.

**காணி விற்பனைக்கு**

சண்டிலிப்பாய் ஐயனார் கோயில் வீதியில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
0779234825

# We are HIRING
# Front Office Executive

## CANDIDATE PROFILE

- Passed GCE A/L
- Strong interpersonal and communication skills.
- Excellent telephone etiquette and knowledge.
- Hands-on experience in front desk operations
- Basic computer literacy (MS Office packages)
- Outgoing personality
- Certificate / Diploma in Business Administration or a similar field will be an added advantage.

**Walk-in-interview on 22-06-2024**
between10.00 am to 12.00 noon



**IIS CITY CAMPUS**
No-655, Navalar Road, Jaffna.
021 222 8060 |077 666 0054 | www.iis.edu.lk

IIS CITY CAMPUS





Build Your **Dream Home** with us....

**NORTH WALL**
ENGINEERING

"Experience a professional service like no other"

**Our Services:**
- Architectural Designging
- Structural Planning
- 2D & 3D Drawing
- BOQ Assessment
- Interior Designing
- Landscaping

For Quotations Contact us on
**0777 818 208 / 0774 002 766**

Nelliyady, Jaffna.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தல் முறைகேடுகள்

தேர்தல் நெருங்கி விட்டது. இனி என்ன? தேர்தல் முறைகேடுகளும் தாராளமாகத் தொடங்கி விடும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இப்போது அதிகாரத்தில் இருக்கின்றார். அவரும் இந்த ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கத் தயாராகி வருகின்றார். அவரது தற்போதைய பதவி நிலையை வைத்து, அதைத் தவறாகப் பிரயோகித்து, தேர்தல் ஆதாயம் தேடும் முறைகேடுகள் பல கட்டவிழ்கின்றன. அவற்றில் சிலவற்றை நேரத்துடனேயே தேர்தல் ஆணையம் எழுத்தில் ஜனாதிபதி செயலகத்திற்கு ஆட்சேபித்துச் சுட்டிக்காட்டி உள்ளது. அப்படியிருக்கையில், அந்த ஆட்சேபனைகளை உதாசீனப்படுத்தி, புறமொதுக்கி விட்டு, அத்தகைய முறைகேடான நடவடிக்கைகளில் அதிகார பீடம் முழுவீச்சில் முன் நகர்கின்றது.

ஜனாதிபதித் தேர்தல் இன்னும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படாத பின்னணியில், இத்தகைய செயல்பாடுகளைத் தேர்தல் ஆணையம் சட்டத்தைப் பிரயோகித்து நேரடியாகத் தடுக்க முடியாத நிலைமை.

அதனால், சுயாதீன தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் தாமே உயர்நீதிமன்றத்தின் கதவைத் தட்டியுள்ளன.

அறிவிக்கப்பட்டு, வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, வாக்குச் சீட்டுகளில் ஒரு பகுதி அச்சிடப்பட்டு விட்ட உள்ளூராட்சித் தேர்தல் சுமார் ஒன்றரை வருடங்களாக நிலுவையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அதற்கு தேவையான சுமார் ஆயிரம் கோடி ரூபா நிதி இல்லை என்று காட்டி, அதை வெட்டி, தேர்தலை நடத்த விடாமல் தடுத்து வைத்திருக்கின்றார் நாட்டின் நிதி அமைச்சருமான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இப்போது ஜனாதிபதித் தேர்தல் என்றதும் நாட்டில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் அவசர அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு என 1,400 கோடி ரூபாவை அவரது நிதி அமைச்சு விடுவித்திருக்கின்றது. உள்ளூராட்சி மன்றங்கள் தோறும் இந்த அபிவிருத்தி நிதியை செலவிடுவதற்கான திட்டங்களை அடையாளம் கண்டு, அவற்றைத் தயாரித்து, மேற்பார்வை செய்து, முன்னெடுக்கும் பொறுப்பு அந்தந்த உள்ளூராட்சி மன்றங்களைச் சேர்ந்த பிரஜைகள் குழுவிடம் ஒப்படைக்கப்படுவதாக அரசின் சுற்றறிக்கை கூறுகிறது.

அதேபோல கிராமப்புறங்களில் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு நிதி உதவி நேரடியாக வழங்கும் திட்டங்களையும் இதே முறைமையில் முன்னெடுக்க நிதி அமைச்சு சுற்றறிக்கை அனுப்பி உள்ளது.

இந்தத் திட்டங்களை எல்லாம் ஜூலை 31 ஆம் திகதிக்குள் அவசர அவசரமாக முடிக்கும்படி அரசு பணிப்புரை விடுத்திருக்கின்றது.

அதாவது, அரசு தரப்பின் சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் வேட்பாளராக நியமிக்கப்பட்டிருந்தவர்களை கொண்டு அரசு நிதியைச் செலவிடச் செய்து, அரசியல் ஆதாயம் தேடும் நாசூக்கான திட்டங்கள் இவை. ஜனாதிபதித் தேர்தலிலும், நிலுவையில் நிற்கும் உள்ளூராட்சித் தேர்தலிலும் அரச நிதியைப் பயன்படுத்தி அரசியல் ஆதாயம் தேடும் தேர்தல் முறைகேடு.

இதற்கு எதிராக 'பவ்ரல்' அமைப்பு உயர்நீதிமன்றுக்குப் போயிருக்கின்றது. இது தொடர்பில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் அமைச்சரவை உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அழைப்பாணை அனுப்ப பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் குமுதினி விக்கிரமசிங்க, அச்சல வெங்கப்புலி ஆகியோரைக் கொண்ட ஆயம் உத்தரவிட்டிருக்கின்றது.

இந்த மனுத் தொடர்பாக எதிர்மனுதாரர்கள் தரப்பில் பூர்வாங்க ஆட்சேபனை ஏதும் இருந்தால் அதனை தாக்கல் செய்வதற்கு வரும் 24ஆம் திகதி வரையிலும் கால அவகாசம் வழங்கி உள்ள உயர் நீதிமன்றம், மனுவுக்கு ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய வரும் 28ஆம் திகதி வரை காலம் வழங்கி உள்ளது. அத்துடன் அவற்றில் உள்ள உண்மைத் தன்மைகளைப் பரிசீலிக்க வரும் மூன்றாம் திகதி மன்றில் வழக்கை எடுக்கவும் உத்தரவிட்டுள்ளது.

ஆக, இந்த ஏற்பாடுகள் தேர்தல் முறைகேடுகளா என்பதைக் காலம் தாழ்த்தாமல் பரிசீலித்து, ஒரு திட்டவட்டமான தீர்மானத்தை விரைந்து எடுப்பதில் உயர் நீதிமன்றம் கரிசனையாக இருப்பதாகவே தோன்றுகின்றது.

இந்த நாட்டில் அநீதிகளைத் தட்டிக் கேட்க எல்லா விடயங்களுக்கும் நீதிமன்றத்தின் கதவைத் தட்ட வேண்டி இருப்பதுதான் பெரும் துரதிஷ்டம்.

## மக்களவை சபாநாயகர் பதவி;

# பா.ஜ.க. பரிந்துரைக்கும் வேட்பாளருக்கு ஆதரவு வழங்கும் ஐக்கிய ஜனதா தளம்



மக்களவை சபாநாயகர் பதவிக்கு பா.ஜ.கவால் பரிந்துரைக்கப்படும் வேட்பாளரை ஐக்கிய ஜனதா தளம் (ஜே.டி.யு) ஆதரிக்கும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர் கே.சி. தியாகி தெரிவித்துள்ளார்.

செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில், “ஐக்கிய ஜனதா தளமும், தெலுங்கு தேச கட்சியும் தேசிய ஜனநாயகக் கூட்டணியில் உறுதியாக இருக்கிறோம். மக்களவை சபாநாயகர் பதவிக்கு பா.ஜ.க. யாரை பரிந்துரைக்கிறதோ அவரை நாங்கள் ஆதரிப்போம்” எனத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய ஜனதா தளம் அல்லது தெலுங்கு தேசம் கட்சியைச் சேர்ந்த ஒருவர் சபாநாயகராக தேர்வு செய்யப்படலாம் என பேசப்படுகிறதே என்ற கேள்விக்கு பதில் அளித்த கே.சி. தியாகி, “கூட்டணி கட்சிகளுடன் இணைந்து கூட்டணி ஆட்சியை பாஜகதான் வழிநடத்துகிறது” எனத் தெரிவித்தார்.

இதன்மூலம், கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த ஒருவர் சபாநாயகராக தேர்வாக வாய்ப்பில்லை என்பது உறுதியாகிறது.

இந்தியாவின் 18 ஆவது நாடாளுமன்றத்தின் முதல் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி தொடங்குகிறது. சபாநாயகரை தேர்வு செய்வதற்கான தேர்தல் 26 ஆம் திகதி நடைபெற உள்ளது.

மத்திய பட்ஜெட்டின்போது, மக்களின் கோரிக்கைகள் குறித்து நாடாளுமன்றத்தில் நாங்கள் விவாதிப்போம் என்றும் கே.சி. தியாகி தெரிவித்தார்.

“நாடாளுமன்றத்தில் ஆரோக்கியமான விவாதம் நடைபெறும். ஒவ்வொரு எம்.பி.யும் தங்கள் தொகுதியின் எதிர்பார்ப்புகள், கோரிக்கைகள், பிரச்சினைகள் ஆகியவற்றை நாடாளுமன்றத்தில் எழுப்புவார்கள்” எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

# தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் பா.ம.க. போட்டியிடுமென அறிவிப்பு



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் பா.ம.க. போட்டியிடும் என்று தமிழக பா.ஜ.க. அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக பா.ஜ.க. விடுத்துள்ள அறிக்கையில், “தமிழகத்தில் விக்கிரவாண்டி சட்டசபை தொகுதிக்கான இடைத்தேர்தல் எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதி நடைபெற உள்ளது.

தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம் பெற்றிருக்கும் அனைத்து கூட்டணி கட்சி தலைவர்களும் ஒருமனதாக எடுத்த முடிவின்படி, தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகிக்கும் பாட்டாளி மக்கள் கட்சியானது விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் என்று அறிவிக்கப்படுகிறது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் தி.மு.க சார்பில் தி.மு.கவின் விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளராக இருக்கும் அன்னியூர் சிவாவும், நாம் தமிழர் கட்சி சார்பாக மருத்துவர் அபிநயாவும் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டப்பேரவைத் தொகுதி எம்.எல்.ஏவும், மாவட்ட தி.மு.க. செயலாளருமான புகழேந்தி உயிரிழந்ததையடுத்து. விக்கிரவாண்டி தொகுதிக்கு எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதி இடைத்தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்தது.

இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று தொடங்கியது. எதிர்வரும் 21 ஆம் திகதி வரை வேட்புமனுக்களை தாக்கல் செய்யலாம். வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறும். மனுக்களை திரும்பப் பெற எதிர்வரும் 26 ஆம் திகதி கடைசி நாளாகும். அன்றே வேட்பாளர் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும். ஜூலை 10 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற்று, ஜூலை 13 ஆம் திகதி வாக்கு எண்ணிக்கை நடத்தப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

# ரஷ்ய சொத்துகள் மூலம் கிடைக்கும் வருவாயை உக்ரைனுக்கு வழங்க ஜி7 தலைவர்கள் இணக்கம்





உலக நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் ஜி7 மாநாடு இத்தாலியில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

வளர்ச்சியடைந்த நாடுகளான அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், கனடா ஆகிய நாடுகள் ஜி7 கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கின்றன.

இந்த நிலையில், இந்த 7 நாடுகளினதும் தலைவர்கள் பங்கேற்கும் 50 ஆவது மாநாடு இத்தாலியின் அபுலியா மாகாணத்தில் உள்ள பசானோ நகரில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி இந்த மாநாட்டிற்கு தலைமை தாங்கினார்.

இது தவிர, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர்ரிஷி சுனக், ஜேர்மனி பிரதமர் ஓலஃப் ஷால்ஸ், பிரான்ஸ் அதிபர் இமானுவல் மெக்ரோன், ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ ஆகியோரும் மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

பு7 அமைப்பின் 'எண்ணிக்கையில் சேர்க்கப்படாத' உறுப்பினராகத் திகழும் ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் ஐரோப்பிய ஆணையத் தலைவர்உர்சுலா வான் டெர் லேயின், ஐரோப்பிய கவுன்சில் தலைவர் சார்லஸ் மிஷெல் ஆகியோர் மாநாட்டில் பங்கேற்கின்றனர்.

மாநாட்டின் சிறப்பு அழைப்பாளர்களாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி, உக்ரைன் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, துருக்கி ஜனாதிபதி எர்டோகன் உள்ளிட்ட 11 நாடுகளின் தலைவர்களும் போப்பாண்டவர் பிரான்சிஸும் கலந்துகொள்கின்றனர்.

ஐ.நா. பொதுச் செயலர்அன்டோனியோ குட்டெரெஸ், உலக வங்கி தலைவர், சர்வதேச நிதியத் தலைவர் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகளின் தலைவர்களும் இந்த மாநாட்டில் விருந்தினர்களாக கலந்துகொள்கின்றனர்.

எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் இந்த மாநாட்டில் காஸா போர், உக்ரைன் போர் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முடக்கப்பட்ட ரஷ்ய சொத்துகளில் இருந்து கிடைக்கும் இலாபத்தைக் கொண்டு உக்ரைனுக்கு 5,000 கோடி டொலர் கடனுதவி அளிக்க ஜி7 மாநாட்டின் முதல் நாளில் உறுப்பு நாடுகள் இணக்கம் தெரிவித்துள்ளன.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து அதன் நான்கு பிரதேசங்களின் கணிசமான பகுதிகளை கைப்பற்றியுள்ளது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள், உக்ரைனுக்கு ஆயுத மற்றும் நிதி யுதவி அளித்து வருகின்றன.

இருந்தாலும், தத்தமது நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதார சூழல் காரணமாக உக்ரைனுக்கு தொடர்ந்து நிதியளிப்பதில் அந்த நாடுகள் பின்னடைவைச் சந்தித்து வருவதாகக் கூறப்படுகிறது.


இந்த நிலையில், தங்கள் நாடுகளில் முடக்கப்பட்டுள்ள ரஷ்ய சொத்துகள் மூலம் கிடைக்கும் வருவாயை உக்ரைனுக்கு அளிக்க வேண்டும் என்று ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் நீண்ட காலமாகவே கூறிவந்தனர்.

ஆனால், ஐரோப்பிய நாடுகளில் தாங்கள் செய்துள்ள முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு, தங்கள் மீதே தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு நிதியுதவி அளிப்பது திருட்டுச் செயலுக்கு சமம் என்று ரஷ்யா கண்டனம் தெரிவித்து வருகிறது.

அந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால், சொத்துகளை பாதுகாப்பாக முதலீடு செய்வதற்கு ஏற்ற இடம் என்ற பெயரை ஐரோப்பிய நாடுகள் இழந்துவிடும். அது, அந்த நாடுகளின் பொருளாதாரத்தைக் கடுமையாக பாதிக்கும் என்றும் ரஷ்யா எச்சரித்துள்ளது.

எனினும், முடக்கப்பட்ட ரஷ்ய சொத்துகளில் இருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு உக்ரைனுக்கு நிதியுதவி அளிக்க ஜி7 தலைவர்கள் தற்போது இணங்கியுள்ளனர்.

# டொலர், யூரோக்களுக்கு தடை விதித்துள்ள ரஷ்யா




டொலர்கள் மற்றும் யூரோக்களை பயன்படுத்தி வர்த்தகத்தை நிறுத்த ரஷ்யா முடிவு செய்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்நியச் செலாவணி பரிவர்த்தனைகள், உலோகங்கள் வர்த்தகம், பங்குகள் மற்றும் பத்திரங்களுக்கு டொலர் மற்றும் யூரோவை இனி பயன்படுத்தப்போவதில்லை என்று மொஸ்கோ பங்குச் சந்தை அறிவித்துள்ளது.

அமெரிக்காவினால் ரஷ்யாவிற்கு எதிராக புதிய பொருளாதார தடைகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் ரஷ்யா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக ரஷ்யாவின் மத்திய வங்கி கூறுகையில், "மொஸ்கோ எக்ஸ்சேஞ்ச் குழுவிற்கு எதிராக அமெரிக்காவால் கட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியதன் காரணமாக, அமெரிக்க டொலர்கள் மற்றும் யூரோக்களில் குறிப்பிடப்பட்ட கருவிகளின் பரிமாற்ற வர்த்தகம் மற்றும் தீர்வு இடைநிறுத்தப்பட்டுள்ளது." என தெரிவிக்கப்பட்டுள்ளது.






# தெற்காசியாவின் சிறந்த கல்வி முறையினை நாட்டில் உருவாக்க நடவடிக்கை எடுப்போம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

எதிர்காலத்திற்கு ஏற்ற, தெற்காசியாவின் சிறந்த கல்வி முறையை இந்நாட்டில் உருவாக்குவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பபட்டு வருகின்றன என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிலாபம், கிரிமெட்டியான பௌத்த மகளிர் தேசிய பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுவரும் மூன்று மாடிக் கட்டடத்தின் முதற்கட்டக் கட்டடத்தை நேற்று பிற்பகல் மாணவர்களிடம் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கிரிமெட்டியான பௌத்த மகளிர் தேசிய பாடசாலைக்குச் நேற்றுப் பிற்பகல் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மாணவிகளால் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.

பாடசாலை வளாகத்தில் அமைந்துள்ள பௌத்த விகாரைக்குச் சென்று பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசிர்வாதம் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி, பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து புதிய கட்டடத்தை மாணவர்களிடம் கையளித்தார்.

புதிய வகுப்பறைகளை பார்வையிடச் சென்ற ஜனாதிபதி மாணவர்களுடன் சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த கல்லூரி மாணவர்களுக்கான பரிசில்களும் ஜனாதிபதியினால் வழங்கி வைக்கப்பட்டன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நினைவுப் பரிசும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வின்போது ஜனாதிபதி மேலும் கருத்து தெரிவிக்கும்போது –

“கடினமான பொருளாதார சூழ்நிலையிலும், நாட்டின் பிள்ளைகளுக்கு நவீன கல்வியை வழங்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. கடந்த கால கல்வி முறைகள் பற்றி தற்போது பேசுவதில் அர்த்தமில்லை. எதிர்காலத்தைப் பார்த்து, தெற்காசியாவில் சிறந்த கல்வி முறையை இந்நாட்டில் உருவாக்க வேண்டும். நமது நாட்டின் பலம் கல்விதான். நம் நாட்டில் எப்பொழுதும் சிறந்த கல்வி முறை உள்ளது. கடந்த காலங்களில் கல்விக்காக இயன்றளவு நிதி ஒதுக்கீடுகளை வழங்கினோம்.

நான் வங்குரோத்தடைந்த நாட்டையே பொறுப்பேற்றேன். அப்போது அரசியல் கட்சிகள் பிளவுபட்டிருந்தன. எனவே, எங்களில் ஒரு குழு ஒன்று சேர்ந்து அரசாங்கத்தை உருவாக்கி நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு வந்தோம். இப்போது நாம் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். தற்போது நாம் படிப்படியாக பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து முன்னேறி வருகிறோம்.

சர்வதேச நாணய நிதியம் நேற்று வெளியிட்ட அறிக்கையின்படி, அடுத்த தவணைக்கான பணத்தை வெற்றிகரமாகப் பெற்றுள்ளோம். அத்துடன் இலங்கைக்கு உத்தியோகபூர்வமாக கடன் வழங்கிய நாடுகளின் குழு

12












# தெற்காசியாவின் சிறந்த கல்வி முறையினை நாட்டில் உருவாக்க நடவடிக்கை எடுப்போம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(11ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அடுத்த வாரம் கூடவுள்ளது. அந்தக் கூட்டத்திற்குப் பிறகு, நாம் வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட முடியும். இரண்டு வருடங்கள் முடிவதற்குள் இந்த நிலையை அடைந்ததை யிட்டு நான் பெருமைப்படுகிறேன்.

அதனால் நாம் திருப்தியடைய முடியாது. சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இரண்டு ஆண்டுகளில் வேலையில்லாத் திண்டாட்டத்தை 5 வீதமாகக் குறைக்க வேண்டும், வருமானத்தையும் அதிகரித்துக்கொள்ள வேண்டும். அதற்கான வேலைத் திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது. அந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் சென்றால்தான் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும். நாம் புதிதாக சிந்திக்க வேண்டும். கல்வியில் புதிய தொழில்நுட்பத்தை உள்ளீர்ப்பதற்கான முயற்சிகளை முன்னெடுத்து வருகிறோம்.

நாட்டை அபிவிருத்தி செய்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். கோஷங்களை எழுப்பி காலம் கடத்த இப்போது நேரமில்லை. அந்த யுகத்திற்கு நாம் திரும்பிச் செல்ல முடியாது.

மாதம்பை பொருளாதார வலயத்தை மீள ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளோம். அத்துடன் பிங்கிரிய பிரதேசத்தில் வர்த்தக வலயம் மற்றும் முதலீட்டு வலயத்தை ஆரம்பிப்பதற்காக ஆயிரம் ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் இரணவிலவில் சுற்றுலா வலயமொன்றை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. அப்போது சுற்றுலாப் பொருளாதாரமும், சந்தைப் பொருளாதாரமும் உருவாகும். தகவல் தொழில்நுட்பக் கல்வியைப் பெற்றவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் மாதம்பையில் தகவல் தொழில்நுட்ப நகரமொன்றை உருவாக்க எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் விவசாய நவீன மயமாக்கல் திட்டத்தின் கீழ் கிராமங்களில் நவீன விவசாயம் அறிமுகப்படுத்தப்படுவதோடு, இளையோருக்கு அதற்கு அவசியமான பயிற்சி பெற்றுக் கொடுக்கப்படும். அதேபோல் மீன்பிடித்துறை வளர்ச்சியை மையப்படுத்தி இப்பகுதியில் புதிய பொருளாதாரத்தைக் கட்டமைக்க வேண்டும். 1977 ஆம் ஆண்டு கம்பஹாவிற்கு புதிய பொருளாதாரத்தை வழங்கினோம். இப்போது இப்பகுதியிலும் அதற்குரிய திட்டத்தை செயல்படுத்த எதிர்பார்க்கிறோம். அதனால் சிலாபம் – குளியாபிட்டிய வரையான பகுதியில் பெரும் அபிவிருத்தி ஏற்படும்.

நாட்டை அபிவிருத்தி செய்ய, நாம் புதிய பாதையில் செல்ல வேண்டும். பொருளாதார மாற்றத்தின் ஊடாக, நாட்டில் துரித அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கிலேயே பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலத்தை சமர்பித்திருக்கிறோம். அதனால் அரசியல் சாராமல் அதற்கு சகலரும் ஆதரவளிக்க வேண்டும். வழக்கமான அரசியலை இந்த நேரத்தில் செய்ய முடியாது. எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும், இந்நாட்டு பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக இந்தக் கொள்கைகளை செயல்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.”– என்றார்.









# யாழ் வணிக கழகத்தினருடன் தேசிய மக்கள் சக்தி சந்திப்பு

யாழ்ப்பாண வணிக கழகத்திற்கும் தேசிய மக்கள் சக்தியினருக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று யாழ்ப்பாண வணிக சங்கத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரம், தேசிய மக்கள் சக்தியின் சார்பாக கோப் குழுவின் முன்னாள் தலைவர் சுனில் ஹந்தும்நெத்தி, யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகரன் மற்றும் வணிகர் கழகத்தின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வணிகர் கழகத்தின் தலைவர் இ.ஜெயசேகரம் –

பொது வேட்பாளர் தொடர்பில் நாம் ஆதரவளிக்கிறோம்.

தற்போது தேர்தலுக்கு முன்னுள்ள காலத்தில் 13 யை அமல்படுத்துவதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அனைத்து கட்சிகளிடமும் இது தொடர்பாகக் கோரிக்கை விடுக்கிறோம். அனைவரும் ஒரே இடத்தில் சந்தித்து 13 யை தற்போது அமல்படுத்தினால் அவருக்கு அனைவருடைய ஆதரவையும் பெற்றுக் கொடுப்போம். – என்றார். இதற்கு சுனில் ஹந்தும்நெத்தி பதிலளித்தார்.

நாட்டிலே பல்வேறு வகையான பிரச்சினைகள் எழுந்துள்ளன. எனவே அப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் தமிழ் மக்கள் தற்போது புதிய தலைவரை தெரிவு செய்யும் நிலையில் உள்ளார்கள்.

13ஆம் திருத்தச் சட்டம் முழுமையாக அமல்படுத்துவது தொடர்பில் நாம் எங்களுடைய தலைவர்களுடன் பேசி அதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்கி முழுமையாக அமல்படுத்துவோம்.

எனவே நாட்டை சுபீட்சமான எதிர் காலத்திற்கு கொண்டு செல்வதற்கு உங்களுடைய ஆதரவு தேவை.

எனவே வணிக கழகம் என்ற வகையில் நாம் உங்களுக்கு தேவையான அனைத்து ஆதரவையும் வழங்குவோம்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். 13-ஆம் திருத்தச் சட்ட முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை நாமும் முன் வைத்துள்ளோம்.

இந்த நாட்டிலுள்ள தேசிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு புதிய பாதை தேவை. 13 பற்றிய விடயங்கள் எமக்கு தெரிகிறது. மாகாண சபை முறைமை மூலம் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காண முடியாது என்பதைக் கூறிவருகிறோம்.

கடந்த கால தேர்தல் விஞ்ஞாபனத்திலும் நாம் அதனைக் கூறிவருகின்றோம். நாட்டிலுள்ள அரசியல் யாப்பின் ஒரு பகுதியே அது. அதனை யாரும் அமுல்படுத்த தேவையில்லை. அதனை நடைமுறைப்படுத்த ஒத்துழைக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

இம்முறை தேர்தலில் நாமே வெற்றிபெறவுள்ளோம். எனவே ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பதாக எதனை அமுல்படுத்த முடியும் என்பது தொடர்பாக திறந்து கலந்துரையாடலை அனைத்துத் தரப்புடனும் மேற்கொள்ள நாம் முன்வந்துள்ளோம். – என்றார்.








# கொழும்பு கம்பன் விழா கோலாகலமாக ஆரம்பம்

அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் கொழும்பு கம்பன் விழா - 2024 நேற்று வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் ஆரம்பமானது.


நிகழ்வின் ஆரம்பத்தில் ஸ்ரீ ஐஸ்வர்ய லக்ஷ்மி திருக் கோவிலிலிருந்து ஊர்வலமாக கம்பன் திருவுருவப்படம், இராமர் திருவுருவச் சிலை எடுத்து வரப்படுவதையும், அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை மங்கல விளக்கேற்றி வைப்பதையும், அ.ஆரூரன் கடவுள் வாழ்த்து இசைப்பதையும், ஜெ.விஸ்வநாதன், ஈ. கணேஷ் தெய்வநாயகம் உரையாற்றுவதையும் "கம்ப இராமாயணம்" முதற்பிரதியை "இலக்கியப்புரவலர்" அல்ஹாஜ் ஹாசிம் உமர் பெற்றுக்கொள்வதையும் காணலாம். (மேலதிக படங்கள் 15ஆம் பக்கத்தில்...)

**(படப்பிடிப்பு எஸ். எம். சுரேந்திரன்)**















# கொழும்பு கம்பன் விழா கோலாகலமாக ஆரம்பம்
















# இ.தொ.காங்கிரஸின் துரை மதியுகராஜா ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தார்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர் துரை மதியுகராஜா நேற்று ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

மத்திய மாகாண சபையின் உப தவிசாளராக இரண்டு தடவைகளும், அவைத் தலைவராக பதவி வகித்தவரும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உப தவிசாளரும், 25 வருடங்களுக்கும் மேலாக கண்டி மாவட்டத்தில் இலங்ந்த் தொழில ளர் காங்கிரஸின் பிரதான அமைப்பாளராகவும் துரை மதியுகராஜா பணியாற்றியுள்ளார்.

முப்பது ஆண்டுகளுக்கும் மேலான பலதரப்பட்ட அரசியல் மற்றும் தொழிற்சங்க அனுபவத்துடன் கூடிய முன்னணி தொழிற்சங்கத் தலைவரும் அரசியல்வாதியுமான துரை மதியுகராஜா, அரசியல் மற்றும் தொழிற்சங்கங்கள் குறித்த பரந்த அறிவைக் கொண்ட ஒருவர். ஆங்கிலம், தமிழ் மற்றும் சிங்களம் ஆகிய மொழிகளில் பன்மொழிப் பேச்சாளரான இவர், ஓர் எழுத்தாளருமாவார்.

1991 இல் கண்டி மாநகர சபைக்கு அதிகூடிய வாக்குகளைப் பெற்று தெரிவு செய்யப்பட்ட இவர், 1994 ஆம் ஆண்டும், 1997 ஆம் ஆண்டு மத்திய மாகாண சபை உறுப்பினராகவும், 2001 இல் உப தவிசாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2002 ஆம் ஆண்டு மத்திய மாகாண சபையின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்டு 40,000 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற ஆசனத்தை இழந்தாலும், மீண்டும் 2004 இல் மத்திய மாகாண சபையின் அவைத் தலைவராக பதவி வகித்தார்.

அத்துடன், 2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை மத்திய மாகாண சபைக்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டு அதன் தவிசாளராகவும் பதவி வகித்தார். மேலும், 3 நாடாளுமன்றத் தேர்தல்களில் தேசியப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதானியாகவும், தொழிலாளர் கல்விப் பொறுப்பாளராகவும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் யாப்புத் திருத்தக் குழுவின் உறுப்பினராகவும், மாகாண எல்லை நிர்ணயக் குழுவின் உறுப்பினராகவும் எனப் பல பதவிகளை வகித்து அனுபவம் வாய்ந்த அரசியல்வாதியாகவும் துரை மதியுகராஜா திகழ்ந்து வருகிறார்.







# இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் இம்மாதம் வருகிறார் என அலி சப்ரி தகவல்



"இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ் .ஜெய்சங்கர் இந்த மாதம் இலங்கை வரவுள்ளார். இந்த விஜயத்தின் போது இரு நாடுகளினதும் உறவை வலுப்படுத்துவதற்கான பல்வேறு உயர்மட்டப் பேச்சுவார்த்தைகள் இடம்பெறவுள்ளன.."

– இவ்வாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வில் கலந்து கொண்டார். அதன்படி இந்திய வெளிவிவகார அமைச்சர் இம்மாதம் இலங்கை வருவார் என எதிர்பார்க்கின்றோம். அதனையடுத்து இந்தியப் பிரதமரின் விஜயமும் விரைவில் இடம்பெறும் என நம்புகிறோம்.

மேலும், இக்காலகட்டத்தில் அரசாங்கம் பாரிய வெற்றிகளை அடைந்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம் தொடர்பான இரண்டாவது மீளாய்வை வெற்றிகரமாக முடித்தமைக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு தெரிவித்துள்ளது.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான மூன்றாவது தவணை விடுவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நாம் மிகத் துல்லியமாகக் கையாண்டுள்ளோம் என்பதே இதன் மூலம் தெளிவாகின்றது.

மேலும், வெளிநாட்டுக் கடனை முகாமைத்துவம் மற்றும் மறுசீரமைப்புச் செயற்பாடுகளும் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன. வெளிநாடுகளுடன் கடன் முகாமைத்துவம் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட முடியும் என்றும் நம்புகிறோம். வெளிநாட்டு பிணைமுறி உரிமையாளார்களுடனான கலந்துரையாடல் சாதகமானதாக அமைந்துள்ளது. அது வெற்றியடையும் பட்சத்தில் இலங்கை கடன் செலுதாத சூழ்நிலையில் இருந்து விடுபட்டு கடனை திருப்பிச் செலுத்தும் நாடாக மாற முடியும்.

அத்துடன், ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க அடுத்த மாதம் நான் ஜப்பானுக்கு விஜயம் செய்யவுள்ளேன். இருதரப்பு உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுடன் உடன்பாடு எட்டப்பட்ட பின்னர், ஜப்பானின் ஆதரவுடன் இந்நாட்டில் ஆரம்பிக்கப்பட்டு, தற்போது தடைப்பட்டுள்ள அனைத்து அபிவிருத்தித் திட்டங்களும் மீண்டும் தொடங்கப்படும் என்று ஜப்பான் உறுதியளித்துள்ளது.

அண்மையில், ரஷ்யாவில் நடைபெற்ற பிரிக்ஸ் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில், இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றேன். பிரிக்ஸ் அமைப்பில் இலங்கை இணைய வேண்டுமா என்பது குறித்து கலந்துரையாட வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்துள்ளது.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, திறைசேரி, நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகள் குழுவொன்று இந்த விடயத்தை பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கை இம்மாதம் கிடைத்த பின்னர் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

மேலும், ரஷ்ய இராணுவத்தில் இணைந்துள்ள முன்னாள் இராணுவ வீரர்கள் குறித்து ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் உடன் மேலும் கலந்துரையாடினோம். இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய உள்ளிட்ட குழுவினர் ரஷ்யாவிற்கு விஜயம் செய்ய உள்ளனர்.

இது தொடர்பான கலந்துரையாடல்கள் ஜுன் 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் ரஷ்யாவில் நடைபெறும். இதேவேளை, மியன்மாரில் சிக்கியுள்ள இலங்கையர்களை மீட்பதற்கான கலந்துரையாடல்களும் இந்நாட்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன." – என்றார்.

# அரசியலுக்காகத் தமிழர்களை நாம் ஏமாற்ற வேண்டிய தேவையில்லை

## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு



"அரசமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டம் தோல்வி கண்ட பொறிமுறையாக இருந்த போதிலும் மாற்றுத் தீர்வை முன்வைக்காமல் அதனை நீக்க முடியாது. அவ்வாறு நீக்க முற்பட்டால் அது வேறு பிரச்சினைக்கு வழிவகுக்கக்கூடும்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான வைத்திய கலாநிதி நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அத்துடன், அரசியலுக்காகத் தமிழ் மக்களை ஏமாற்ற வேண்டிய எந்தவொரு தேவைப்பாடும் தேசிய மக்கள் சக்திக்குக் கிடையாது எனவும் அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் மூலம் கடந்த காலங்களில் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு வந்துள்ளனர். இவ்வாறு தமிழ் மக்களை ஏமாற்றி அரசியல் நடத்துவதற்கு தேசிய மக்கள் சக்தி தயாரில்லை. எனவே, இந்த நாட்டை மாற்றுவதற்காக அனைத்து இன மக்களையும் அரவணைத்துக்கொண்டு புதியதொரு திசையை நோக்கி நகர வேண்டும்.

13 ஆவது திருத்தச் சட்டம் ஊடாகப் பிரச்சினைகள் தீரவில்லை. அது தோல்வி கண்டதொரு பொறிமுறையாகும். நானும் மாகாண சபையில் அங்கம் வகித்துள்ளேன். தீர்வுக்குப் பதிலாக அதன்மூலம் நிர்வாகப் பொறிமுறையில் பிரச்சினைகள் வந்துள்ளன.

13 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட விடயங்கள் நிறைவேறாத போதிலும், அது வெள்ளை யானையாகக் கருதப்பட்டாலும் தற்போது வடக்கு, கிழக்கு மக்கள் 13 என்பது தாம் வென்றெடுத்த உரிமையாகவே கருதுகின்றனர். எனவே, இதற்கு மாற்றுத் தீர்வை வழங்காமல் ஒரேடியாக 13 ஐ நீக்கினால் அது வேறு பிரச்சினைக்கு வழிவகுக்கும்.

13 ஆவது திருத்தச் சட்டம் தற்போதுள்ளவாறு அமுலாக்கப்படும். பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு கண்ட பின்னர், அதனைக் குறுகிய காலப்பகுதிக்குள் செய்ய முடியும். புதிய அரசமைப்பு கொண்டுவரப்படும். அதன்மூலம் அனைத்து இன மக்களினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்படும். அனைவரும் சம உரிமை பெற்ற சமூகமாக வாழ முடியும்." – என்றார்.

# வவுனியா பல்கலை ஊழியர்களின் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்

(கே.வசந்தன்)

வவுனியா பல்கலைக்கழகத்தின் கல்வி சாரா ஊழியர்கள் நேற்று பம்பைமடுவில் உள்ள பல்கலைக்கழகத்திற்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தமது சம்பள முரண்பாட்டை அரசாங்கம் தீர்க்க வேண்டும் என வலியுறுத்தி பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வரும் நிலையில் இந்தஜ் கவனவீர்ப்புஒ போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இதன்போது 'பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்த்து வை', 'வழங்குவதாக உறுதிப்படுத்திய கொடுப்பனவை வழங்கு', '25 வீத அதிகரிப்பை உடனடியாக வழங்கு!' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தாங்கி இருந்தனர்.

சுமார் அரை மணி நேரம் இடம்பெற்ற இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை அடுத்து கல்வி சாரா ஊழியர்கள் தங்களுக்கு இடையிலான கூட்டம் ஒன்றையும் ஏற்பாடு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.











# திருமலை மக்கெய்ஸர் அரங்கில் சர்வதேச யோகா தின நிகழ்வுகள்

(எஸ்.கீதபொன்கலன்)

இந்தியத் தூதரகம் மற்றும் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்தின் ஏற்பாட்டில் 10 ஆவது சர்வதேச யோகா தினம் திருகோணமலை மக்கெய்ஸர் மைதானத்தில் நேற்று இடம் பெற்றது.

திருகோணமலை பாடசாலை மாணவர்கள் 2,500 பேர் நிகழ்வில் பங்குபற்றினர்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், யாழ்ப்பாண இந்திய உதவி உயர் ஸ்தானிகர் சாய் முரளி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.












# வடக்கில் இருந்து இரு வாகனங்களில் கடத்தப்பட்ட 70 ஆடுகள்,18 மாடுகள் ஓமந்தை பொலிஸில் சிக்கின

(கே.வசந்தன்)

வடக்கில் இருந்து புத்தளம் மற்றும் கொழும்பு நோக்கி இரு வாகனங்களில் கடத்தப்பட்ட 70 ஆடுகள் மற்றும் 18 மாடுகள் ஓமந்தைப் பகுதியில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. அது தொடர்பில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஓமந்தைப் பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் ஓமந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெயத்திலக தலைமையில் ஏ9 வீதியில் விசேட சோதனை ஒன்றை பொலிஸார் மேற்கொண்டனர்.

ஏ9 வீதியூடாக பயணித்த வாகனங்களை சோதனை செய்த போது இரு வாகனங்கள் நிறுத்தாது வீதியூடாக தப்பிச் சென்றுள்ளன. விரட்டிச் சென்ற பொலிஸார் அவ்விரு வாகனங்களையும் வழிமறித்து சோதனை செய்ததில் வாகனத்தில் சட்டத்திற்கு முரணாக உரிய அனுமதிகளின்றி கடத்தப்பட்ட 70 ஆடுகள் மற்றும் 18 மாடுகள் கண்டு பிடிக்கப்பட்டன.

வடக்கின் கிளிநொச்சியிலிருந்து புத்தளம் நோக்கி கடத்தப்பட்ட 70 ஆடுகளுடன் கூடிய வாகனத்தையும் பொலிஸார் மீட்டுள்ளமையுடன், வாகனத்தில் பயணித்த இரண்டு நபர்களையும் கைது செய்துள்ளனர்.

மற்றைய வாகனம் வடக்கின் முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கி கடத்தப்பட்ட 18 மாடுகளுடன் மீட்கப்பட்டது. அதனைக் கொண்டு சென்ற இரண்டு நபர்களையும் கைது செய்துள்ளனர்.

இவ்விரண்டு சம்பவங்களிலும் கைது செய்யப்பட்ட நான்கு நபர்களையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளனர் என ஓமந்தைப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.




# கல்முனை மாநகர சபை ஆணையாளர் நியமனம்

(அபு அலா)

கிழக்கு மாகாண நிர்வாக அபிவிருத்தி பயிற்சிப் பிரிவின் மாகாணப் பணிப்பாளராக கடமையாற்றி வருகின்ற என்.எம்.நௌபீஸ் கல்முனை மாநகர சபையின் ஆணையாளர் பதவியை வகிப்பதற்கான கடிதத்தை நேற்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இக்கடிதம் வழங்கி வைக்கப்பட்டது. இப்பதவி, கிழக்கு மாகாண நிர்வாக அபிவிருத்தி பயிற்சிப் பிரிவின் மாகாணப் பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாக வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# பொதுவேட்பாளராகக் களமிறங்கத் தயார் தனக்குத் தகுதி உள்ளது என்கிறார் அனந்தி

## ஈழத்தமிழர்களின் நிழல் ஜனாதிபதியாக வேண்டுமாம்

(ந.லோகதயாளன்)

"இன அழிப்புப் போரில் பாதிக்கப்பட்ட மக்களின் நேரடிக் குரலாக சர்வதேச நீதி கோரிய பயணத்தில் காத்திரமாகப் பயணித்த அனுபவமுள்ளவளாகிய நான், தமிழ்ப்பொதுவேட்பாளராக துணிந்து களமிறங்கத் தயாராக உள்ளேன்."

– இவ்வாறு ஈழத் தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்றுத் தாம் நடாத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

"ஈழத் தமிழருக்கான சர்வதேச அரசியலை முன்னெடுப்பதில் கட்சிகளுக்கிடையே ஒற்றுமையற்ற சூழல் – ஆக்கிரமிக்கப்பட்டுள்ள சூழல் – உருவாக்கியுள்ளது.

ஆதலால், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட நிலையில் ஈழத்தமிழருக்கான ஒரு பொதுப் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்து அவரை ஈழத்தமிழர்களின் நிழல் ஜனாதிபதியாக சர்வதேசம் கணிப்பிடும் நிலையைத் தோற்றுவிப்பதே காலத்தின் தேவையாக உள்ளது.

இருப்பினும் இதைச் சரிவரச் செய்ய வேண்டுமானால், ஆக்கிரமித்துள்ள தேசத்தின் ஜனாதிபதி வேட்பாளர் எவரையும் விட அதிக வாக்குகளைப் பெறும் வகையில் ஒருவரை ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ள ஈழத்தமிழர் தேசம் தகுந்த தேர்தல் விஞ்ஞாபனத்தோடு நிறுத்தவேண்டும். அவர் அதிக வாக்குகளால் வெற்றிபெறவேண்டும். அவர் எமது நிழல் ஜனாதிபதியாக இயங்கவேண்டும்.

பொதுவேட்பாளரின் முழுமுயற்சியும் இன அழிப்புக்கான சர்வதேச நீதி நோக்கியதாக அமையவேண்டும்.

இதற்குரிய அஞ்சாநெஞ்சத் துணிவும், தகைமையும், வன்மையும் பொருந்திய ஒருவர் ஈழத்தமிழர் நிழல் ஜனாதிபதிக்குரிய பொது வேட்பாளராகத் தெரிவு செய்யப்படவேண்டும்.

இதற்கு அனைத்துக் கட்சிகளையும் ஒத்துழைக்க நிர்ப்பந்திப்பது ஈழத்தமிழர் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

அதுமட்டுமல்ல, அரச பொறுப்புக் கூறல், சர்வதேச நீதி போன்றவற்றின் தாற்பரியங்களைப் புரியாத, அவற்றை எடுத்தாள இயலாத ஒருவர், அதுவும் இவ் விடயங்களில் முன் அனுபவம் எதுவும் இல்லாத ஒருவர் பொதுவேட்பாளராகி இந்தக் கைங்கரியத்தைச் சாதிக்கமுடியாது.

ஆகவே, 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இன அழிப்புப் போரில் பாதிக்கப்பட்ட மக்களின் நேரடிக் குரலாக சர்வதேச நீதி கோரிய பயணத்தில் காத்திரமாகப் பங்கேற்ற தன்மைகளோடு




பயணித்து அனுபவமுள்ளவளாகிய நான் அந்தக் களத்தில் பயிற்சி பெற்றுள்ள அனுபவத்தோடு துணிந்து களமிறங்கத் தயாராக உள்ளேன் என்பதை இது குறித்த அக்கறையுள்ள அனைவரின் கவனத்துக்கும் இத்தருணத்தில் கொண்டுவருவது எனது கடமையாகிறது.

அதுவும், எந்தக் கட்சியினதும் அல்லது கூட்டினதும் பிரதிநிதியாக அன்றி, ஈழத்தமிழருக்கான பொதுப் பிரதிநிதியாக என்னை மாற்றிக்கொள்ளவும், இதற்கான பொருத்தமான கொள்கை வகுப்பு மேற்கொள்ளப்படும் போது அதற்குக் கட்டுப்பட்டு இயங்கவும் தயாரக உள்ளேன் என்பதையும் பரந்துபட்ட சமூகத்துக்குத் தெரிவிப்பதும் எனது கடமையாகிறது.

அதுமட்டுமன்றி, இவ்வாறான தன்மைகளோடு என்னை விடவும் ஆற்றலுள்ள வேறு எவரேனும் நம்பகமாக நிறுவப்படக் கூடிய வகையில் முன்வைக்கப்பட்டால் அவ்வாறான வேட்பாளரை ஆதரிக்கவும் நான் தயாராக உள்ளேன் என்பதையும் சுட்டிக்காட்டவும் விரும்புகிறேன்.

ஆகவே, இதற்கான பொருத்தமான கொள்கை வகுப்பை ஏற்படுத்தப்பட்டுள்ள பொதுச்சபை மேற்கொள்ளவேண்டும். அதனால், இதைச் சரிவர மேற்கொள்ள இயலுமா என்பதை நிறுவுவதும் அதை நடைமுறையிற் சாதிப்பதும் ஒட்டுமொத்த ஈழத்தமிழர் தேசத்தின் சமூகப் பொறுப்பாகும்.

பொதுவேட்பாளர் வேண்டுமா வேண்டாமா என்று விவாதித்துக்கொண்டிருப்பதிலேயே காலத்தைச் செலவிட்டு எந்தவித பொறுப்புக்கூறலும் அற்ற வகையில் விவாதங்களை முன்னெடுத்துக்கொண்டிருக்காமல் நடக்கவேண்டிய விடயத்தை பொறுப்புக்கூறலுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் இதயசுத்தியுடனும் அணுகவேண்டும்.

இதை எதிர்பார்க்கும் வேளையில், குறிப்பாக எதிர்வரும் நாள்களில் தென்னிலங்கையில் களமிறங்கத் தயார் என்று அறிவித்துள்ள ஜனாதிபதி வேட்பாளர்களிடம் இயன்றளவு நேரடிச் சந்திப்புகளை மேற்கொண்டு சில ஆழமான கேள்விகளை எழுப்பி இலங்கை ஒற்றையாட்சி ஜனாதிபதிக்கான சிங்கள தேசத்தின் வேட்பாளர்களை ஈழத்தமிழர்கள் ஏன் நிராகரிக்கவேண்டியுள்ளது என்பதை அவர்களிடம் நேரடியாகவே தெரிவிக்கவுள்ளேன். அதன் விளைவுகளை மக்களுக்கும் அறிவிக்கவுள்ளேன். என்னால் இயன்ற அர்த்தமுள்ள பங்கு இதுவாகவே இருக்கமுடியும்.

குறிப்பாக, ஆறாம் சட்டத்திருத்தத்தை அகற்றி, ஈழத்தமிழர் பாரம்பரியத் தாயகக் கோட்பாட்டை அங்கீகரித்து, தீவின் வடக்கு-கிழக்குப் பகுதியில் பௌத்தத்திற்கான முதன்மைத்துவத்தை நீக்குவதே தனது விருப்பம் என்று பகிரங்கமாக எந்த ஒரு சிங்கள வேட்பாளரேனும் தெரிவிக்கத் தயாராக உள்ளாரா என்ற கேள்வியையும், இலங்கைத் தீவில் இன அழிப்பு நடைபெற்றதா இல்லையா என்பதை இன அழிப்பைத் தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான பட்டயத்தின் அடிப்படையில் சர்வதேச விசாரணைக்கு உள்ளாக்கி அரச பொறுப்புக்கூறலை விசாரிக்க சர்வதேச நீதி மன்றை நாடும் துணிவு சிங்கள வேட்பாளர்களில் எவருக்கேனும் உண்டா என்றும் அவர்களிடன் நேரடியாகவே வினவி அவர்கள் அதற்குத் தரும் பதிலை ஈழத்தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தவும் என்னாலியன்ற முயற்சியை மேற்கொள்ள உள்ளேன்.

ஆக்கிரமிக்கப்பட்ட தாயகத்தைப் போலவே, புலம் பெயர் சமூகத்திலும் ஒற்றுமையின்மை காணப்படுகிறது. இதற்கு, பிராந்திய அரசியலும் சர்வதேச அரசியலும் பிரதான காரணம். இமாலயப் பிரகடனம் எங்கிருந்து இங்கு வந்தது என்ற கேள்வியைக் கேட்டால் இதற்குரிய விடை கிடைக்கும்.

இருப்பினும் இலங்கை அரசின் இன அழிப்புக்கான அரச பொறுப்பைச் சர்வதேச விசாரணைக்கு உள்ளாக்குவதில் சில காத்திரமான நகர்வுகள் பல முனைகளில் இருந்தும் புலம்பெயர் ஈழத்தமிழர் தரப்புகளால் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தவகையில், காத்திரமான நகர்வுகள் முன்னேறிச் செல்லும் வகையில் எமது மூலோபாய முடிவுகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்பதை இத்தால் வலியுறுத்துகிறேன்."– என்றார்.



# யாழ்ப்பாணத்தை ஸ்மார்ட் நகரமாக்கும் திட்டம் குறித்து ஆளுநருடன் கலந்தாய்வு

யாழ்ப்பாணத்தை ஸ்மார்ட் நகரமாக்குவது (SMART CITY) தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ்டன் , உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகள் நேற்றுக்கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

ஆசியாவில் ஸ்மார்ட் நகரங்களை உருவாக்கும் உலக சுகாதார ஸ்தாபனத்தினால், இலங்கையில் இதுவரையில் 17 ஸ்மார்ட் நகரங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அந்தவகையில் யாழ்ப்பாணம் நகரையும் ஸ்மார்ட் நகரமாக்கும் திட்டயோசனை கடந்த 2019 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டுள்ளது. எனினும் கொவிட் பெருந்தொற்று காராணமாக இந்த திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒருங்கிணைப்புடன் இந்த திட்டத்தை செயற்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் தற்போது முன்வந்துள்ளதுடன், முன்கள ஆய்வுகளையும் நடத்தியுள்ளது. அதற்கமைய, கழிவு முகாமைத்துவம், சுத்தமான குடி தண்ணீர், தூய்மை, ஆரோக்கியமான உணவு, ஆரோக்கிய வாழ்வை கட்டியெழுப்பக்கூடிய சூழல் கட்டமைப்பு அடங்கலாக ஒன்பது பிரிவுகளின் கீழ் ஸ்மார்ட் நகர திட்டத்தை நடைமுறைப்படுத்த உலக சுகாதார ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஆளுநரின் அனுமதியை பெற்றுக்கொள்ளும் நோக்குடன் நேற்றைய தினம் கூட்டம் நடத்தப்பட்டது. இந்த செயற்பாட்டிற்கான முழுமையான திட்ட முன்மொழிவை சமர்பிக்குமாறு இதன்போது ஆளுநர் உலக சுகாதார ஸ்தாபன அதிகாரிகளுக்கு தெரிவித்தார். அத்துடன் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தேவையான உதவிகளை பெற்றுக்கொடுக்குமாறு வடக்கு மாகாண சுகாதார மற்றும் உள்ளூராட்சி திணைக்களங்களின் அதிகாரிகளுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.







# ஊடகவியலாளர் பிரதீபனின் வீட்டைத் தாக்கிய கும்பலை உடனடியாகக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுங்கள்!

## ஜனாதிபதியிடம் அம்பாறை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை

(க.சரவணன்)

ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது வன்முறைக் கும்பல் மேற்கொண்ட தாக்குதலுக்குக் கடும் கண்டனம் தெரிவிப்பதுடன் இந்த வன்முறைக் கும்பலை உடன் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் எனவும் அதேவேளை ஊடகவியலாளின் பாதுகாப்பை பொலிஸார் உறுதி படுத்தவேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் அம்பாறை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

அம்பாறை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஊடகவியலாள் பிரதீபனின் வீட்டின் மீது இடம்பெற்ற தாக்குதலை கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் அச்சுவேலியைச் சேர்ந்த ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது வியாழக்கிழமை அதிகாலை 12.15 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட வன்முறைக் கும்பல் தாக்குதல் நடத்தியதுடன் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்களைத் தாக்கித் தீ வைத்து எரித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் ஊடக அடக்கு முறையை பிரதிபலிப்பதுடன் தமிழ் ஊடகவியலாளர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட திட்டமிட்ட ஒரு செயலாகவே பார்க்கின்றோம்.

அதேவேளை தொடர்ந்து தமிழ் ஊடகவியலாளர் மீது குறிவைக்கப்பட்டு தாக்குதல்களும் அச்சுறுத்தல்களும் இடம்பெற்றுவருகின்றன. இவ்வாறான வன்முறை மூலம் கருத்துக்களை எதிர் கொள்ள முடியாதவர்கள் ஊடகவியலாள களின் கழுத்தை நெரிக்க முடியும் என்ற நப்பாசையுடன் இத்தகைய திட்டமிட்ட தாக்குதல்களை மேற்கொண்டுவரு கின்றமை கோழைத்தனமான செயலாகும்.

ஊடகவியலாளரின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிப்பதுடன் ஊடகவியலாளரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொள்ளவேண்டும் எனக் கோருகின்றோம். அதேவேளை யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக மக்கள் மீதும் ஊடகவியலாளர்கள்!மீதும் கட்டவித்து விடப்பட்டுள்ள வன்முறைகளுக்குக் காரணமான கும்பலை இல்லாது செய்ய வேண்டியது பொலிஸாரின் கடமை என்பதைச் சுட்டிக் காட்டுகிறோம்.

எனவே பொலிஸார் உடனடியாக ஊடகவியலாளர் வீட்டின் மீது தாக்குதல் நடாத்தியவர்களைக் கைது செய்து சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும். அதேவேளை ஊடகசுதந்திரமும் ஊடகவியலாளர்களும் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கான நடவடிக்கையை ஜனாதிபதி எடுக்கவேண்டும் என கோரிக்கை விடுக்கிறோம். – என அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# யாழில் ஊடகவியலாளரின் இல்லத்தின் மீதான தாக்குதலுக்கு மட்டு. ஊடக அமையம் கண்டனம்

(பழுவூரான்)

யாழில் ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் இல்லத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம். அவரது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதுடன் தாக்குதல்தாரிகள் கைதுசெய்யப்பட்டு அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என மட்டு.ஊடக அமையம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை மட்டு.ஊடக அமையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் அச்சுவேலி, பத்தமேனி காளி கோவில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டின் மீது வியாழன் அதிகாலை 12.15 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட வன்முறைக்கும்பல் தாக்குதல் நடத்தியது. இதன்போது வீட்டிற்கு வெளியே இருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக் கரவண்டி உள்ளிட்ட வாகனங்கள் மற்றும் சொத்துக்கள் தாக்கப்பட்டமையுடன் தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன ."திருநங்கைளை தவறாக சித்தரிக்காதே!" என அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள வீட்டில் போடப்பட்டிருந்தன.



கோழைத்தனமாக ஊடகவியலாளரின் வீட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறோம். ஊடகவியலாளரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுக்க வேண்டும்.

வடகிழக்கில் தமிழ் ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியான அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலேயே தமது கடமையினை முன்னெடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கருத்துகளை கருத்துக்களால் எதிர்கொள்ள முடியாதவர்கள் வன்முறைகளை கட்டவிழ்த்து விடுவதன் மூலம் தங்களது அடாவடித்தனங்களையும் அச்சுறுத்தலையும் ஊடகவியலாளர்கள் மீது பிரயோகிக்கும் நிலைமையைத் தடுக்கும் வகையில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

ஊடகவியலாளர் பிரதீபனின் வீட்டின் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாகவே எதிர்காலத்தில் ஊடகவியலாளர்கள் ஓரளவாவது சுதந்திரமாக தமது கடமைகளை முன்னெடுப்பதற்கான வழிகள் ஏற்படுத்தப்படும்.

வடகிழக்கில் தமிழ் ஊடகவியலாளர்கள் தமது கடமைகளை முன்னெடுக்க முடியாத வகையிலான அச்சுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே இவ்வாறான நிலைமைகள் இல்லாமல் செய்யப்பட்டு ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டும். – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளரின் வீட்டின் மீதான தாக்குதல் ஊடகங்களை மௌனிக்கச் செய்யும் முயற்சி

## யாழ். வடமராட்சி ஊடக இல்லம் கண்டனம்



"ஊடகவியலாளர் தம்பித்துறை பிரதீபனின் வீட்டின் மீது நள்ளிரவில் அத்துமீறி நுழைந்து மேற்கொள்ளப்பட்ட வன்முறைத் தாக்குதல் மற்றும் உயிரச்சுறுத்தலை ஏற்படுத்தும் செயற்பாடானது, ஆயுத முனைகளால் பேச முடியாததை வாள் முனையிலும் பெற்றோல் குண்டுகளாலும் பேசி மௌனிச்செய்யும் அடக்குமுறையின் வெளிபாடாகும்."

– இவ்வாறு யாழ். வடமராட்சி ஊடக இல்லம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ் வடமராட்சி ஊடக இல்லம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:–

யாழ் வடமராட்சி ஊடக இல்லம்
JAFFNA VADAMARADCHI MEDIA HOUSE
යාපන වඩමාරච්චි මාධ්‍ය මාලිගාව
பதிவு இல: DS/VOR/KVD/SS-2018-02

"வாள்கள் மற்றும் பெற்றோல் குண்டுகள் மூலம் ஊடகவியலாளர் த.பிரதீபனின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுத்தும் வீட்டில் இருந்த உடமைகளை எரித்து நாசப்படுத்திய தரப்பினர், சம்பவ இடத்தில் மூன்றாம் பாலினத்தவரின் பெயரில் துண்டுப் பிரசுரத்தை வீசிச் சென்றுள்ளதன் மூலம் அவர்கள் மீது பழியை போட்டுவிட்டு கவனத்தை திசைதிருப்பும் நடவடிக்கையாகவே பார்க்கமுடிகிறது.

குறித்த வன்முறை தாக்குதல் சம்பவத்திற்கு பின்னால் பாரிய சதியொன்று புதைந்துள்ளதை நாம் அவதானிக்கின்றோம். கடந்த இரு மாதங்களாக நாட்டின் ஜனாதிபதியின் வடக்கிற்கான விஜயத்தின் போதான நிகழ்வுகளுக்கு ஊடகவியலாளர் த.பிரதீபனுக்கு ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவினரால் தொடர்ச்சியாக அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களில் தமிழ் ஊடகத்துறையின் மீதான நேரடி மற்றும் மறைமுகத் தாக்குதல் சம்பவங்கள், படுகொலைகள், உயிரச்சுறுத்தல் நடவடிக்கைகள் மற்றும் விசாரணை கெடுபிடிகள் என்பன இன்றும் அதேவடிவத்தில் தொடர்ந்து வருகின்ற நிலையில், இவ்வாறான வன்முறைக் கும்பல்களின் மூலம் ஊடகவியலாளர்களை மௌனிக்கச் செய்யும் எத்தனிப்பானது மிக ஆபத்தான அனுகுமுறையாகும்.

தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டு இருப்பும் கேள்விக்குறியாக்கப்பட்டு வரும் இன்றைய சூழமைவில் தமிழர்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளையும், நெருக்கடிகளையும் வெளிக்கொணரும் ஒரே வழிமுறையாக ஊடகப் பரப்பு இருந்து வருகிறது. இவ்வாறான நிலையில் நிகழ்ந்துள்ள இத்தாக்குதலானது ஊடக சுதந்திரத்தின் மீதான பாரிய அச்சுறுத்தலாகும். இச் செயற்பாட்டினை தனியே குறித்த ஓர் ஊடகவியலாளருக்கு எதிரான உரிமை மீறலாக கடந்து சென்றுவிட முடியாது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், பல்வேறு வடிவங்களில் ஊடகவியலாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்டு வந்த அடக்குமுறையானது புதிய புதிய வடிவங்களில் இன்றும் தொடர்ந்தவண்ணமேயுள்ளது. இவ்வாறு உயிர்ப்பலியெடுப்புகள், காணாமல்போகச் செய்தல்கள் உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தவாறே தமிழ் ஊடகத்துறை தமிழ் மக்களின் உரிமைக்குரலாக ஓங்கி ஒலித்து வருகிறது.

அதனையும் நசுக்கி தமிழர்களது குரலை மௌனிக்கச் செய்யும் விதமாக ஊடகத்ததுறை மீதான இவ்வாறான தலையீடுகளை நாம் வன்மையாக கண்டிப்பதோடு, இதுபோன்ற அடக்குமுறை செயற்பாடுகள் உடனடியாகவே தடுத்து நிறுத்தப்பட்டு ஊடக சுதந்திரத்தை உறுதிசெய்ய சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்."– என்று யாழ் வடமராட்சி ஊடக இல்லம் வலியுறுத்தியுள்ளது.

# கொழும்பு தேசிய ஆஸ்பத்திரியில் மயக்க மருந்துக்குப் பற்றாக்குறை

## சத்திரசிகிச்சைகள் இரத்து

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் மயக்க மருந்து பற்றாக் குறையினால் சத்திரசிகிச்சைகளை இரத்து செய்ய நேரிட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

Isoflurane மயக்க மருந்திற்கே தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப் பட்டது.

இது தொடர்பில் சுகாதார அமைச்சின் வைத்திய விநியோகப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஜி. விஜேசூரிய கருத்து தெரிவிக்கையில், இந்த மயக்க மருந்து கொழும்பு துறை முகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள தாகவும் அவற்றை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்




தெரிவித்தார்.

மருந்துகளை விடுவிப்பதற்கான ஆவணங்களை இறக்குமதியாளர்கள் சமர்ப்பிக்காமையால், மருந்துகளை பகிர்ந்தளிப்பதில் தாமதம் நிலவுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




# உடன்படிக்கையை இலங்கை பேணுவது அவசியம் என நாணய நிதியம் வலியுறுத்தல்

இலங்கை ஏற்படுத்திக்கொண்டுள்ள உடன்படிக்கையை தொடர்ச்சியாகப் பேணுவது அவசியமென சர்வதேச நாணய நிதியம் வலியுறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட தூதுக்குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூவர் நேற்று முற்பகல் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"செயற்றிட்ட இலக்குகளை அடைவதற்கான அவதானிப்புகள் மற்றும் மாற்று முன்மொழிவுகள் குறித்து அறிய நாம் தயாராக உள்ளோம்.

எவ்வாறாயினும், அவை சாத்திய மானவையாகவும் செயற்றிட்ட காலப் பகுதிக்குள் அடையக்கூடியவையாகவும் காணப்பட வேண்டும்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு செயன்முறையை முன்கொண்டு செல்ல போதுமான முன்னேற்றம் காணப்படுகின்றது.

வாகன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது தொடர்பில் இலங்கை அதிகாரிகள் ஆரம்ப வரைபடத்தை உருவாக்கியுள்ளனர்.

இதற்கமைய, 2024 மூன்றாம் காலாண்டில் பொதுப்போக்குவரத்து மற்றும் சிறப்பு தேவைக்கான வாகனங்களை இறக்குமதி செய்யவும், 2025 ஆம் ஆண்டளவில் மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீதான கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் இலங்கை முன்னேற்றகரமான நிலையில் இருப்பதை அவதானிக்க முடிகிறது. ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்திட்ட நிபந்தனைகள் தாமதமான நிலையிலும் நிறைவேற்றப்பட்டுள்ளமை சிறந்ததொரு நிலையாகும்.

இலங்கையின் தற்போதைய சீர்த்திருத்தங்களினால் பொருளாதாரத்தின் ஆரம்பக்கட்டமைக்கு சீரடைந்துள்ளது. நிதி ஒத்துழைப்பு திட்டத்தின் கீழ் அதிகாரிகளின் வலுவான செயல் பாட்டை நிர்வாக இயக்குநர்கள் பாராட்டினர்.

பொருளாதாரம் மீட்சிப்பெற்றுள்ளது. பணவீக்கம் குறைவாகவே உள்ளது. வருவாய் சேகரிப்பு மேம்பட்டுள்ளது. நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு ஸ்திரமடைந்துள்ளது.

எவ்வாறாயினும், தற்போதைய கடன் மறுசீரமைப்பு மற்றும் இடம்பெறவுள்ள தேர்தல்கள் ஆகியவற்றால் பாதிப்புகள் மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் காணப்படுகின்றன.

பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கும், நீண்ட கால உள்ளடக்கிய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு சீர்திருத்த வேகத்தை நிலைநிறுத்துவதற்கும் பொருளாதாரக் கொள்கைகளைத் தொடர்ந்து வலுப்படுத்த வேண்டும்.

இலங்கையின் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்காக கடன் மறுசீரமைப்பை முன்னெடுப்பதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை பணிப்பாளர்கள் வரவேற்றுள்ளனர். உத்தியோகபூர்வ கடன் வழங்கும் குழுவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விரைவாக நிறைவு செய்யவும், சீனாவின் ஏற்றுமதி – இறக்குமதி வங்கியுடனான ஒப்பந்தம் இறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கையில் தேர்தல் ஜனநாயக ரீதியில் இடம்பெற வேண்டும். உள்ளக தேர்தல் விவகாரங்களில் சர்வதேச நாணய நிதியம் ஒருபோதும் தலையிடவில்லை. தேர்தல் தொடர்பில் இலங்கை மக்களே தீர்மானிக்க வேண்டும். தேர்தல் ஒன்று இடம்பெறுமாயின் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி புதிய காலவரைவைத் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை ஏற்றுக் கொண்டுள்ள அத்துடன் தற்போது செயற்படுத்தியுள்ள யோசனைகளையும், மறுசீரமைப்புக்களையும் தொடர வேண்டும் என்பது அவசியமாகும். ஏனெனில் இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து இன்னும் முழுமையாக மீட்சிப்பெறவில்லை."– என்றார்.



# சைவத்தின் வழிநடந்த தமிழ்ச் செல்வி தங்கம்மா

**(சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 16 ஆவது நினைவு தினம் இன்றாகும்.)**

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ் மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்பேர்ண், ஆஸ்திரேலியா.**

பக்தி என்னும் கருவை எந்த மொழியும் இலக்கியம் ஆக்கி யதே இல்லை. ஆனால் பக்தியை உயர்வாக்கிப் பார்த்து அதனை இலக்கியமாய் காட்டிய பெருமை எங்கள் அன்னைத் தமிழ் மொ ழிக்கு மட்டுமே வாய்த் திருக்கிறது.

"பக்தி இலக்கியம்" என்று ஒரு பெரும் பகுதியைத் தமிழ் மொழியானது தன்னுடை இலக்கிய வரலாற்றில் கொண்டிருக்கிறது என்பதும் முக்கியம் எனலாம். பக்தி இலக்கியம் என்னும் பெருவெளியில் ஆண்களும் வருகிறார்கள். பெண்களும் வருகிறார்கள். பக்தி இலக்கியப் பாதையில் முகிழ்த்த பாடல்கள் அத்தனையும் இறையருளைப் பற்றியனவாக இருந்த பொழு தும், அவை அத்தனையும் அன்னைத் தமிழின் அழகோ வியமாய், அருங்கருத்துக் களை அடக்கியவனாவாய், இலக்கியச் சுவைகளை ஈவதாய் , புலவர்க்கெல்லாம் நல் விருந்தாய் , தமிழுக்கே பெரும் பொக்கிஷமாய் வாய்த்த நல் வரமென்றே எண்ண வேண்டி இருக்கிறது.

அந்தப் பக்தி இலக்கிய வெளியில் காலத்துக்காலம் ஆண் டவன் அருளால் பல அருளாளர்கள் வந்து இணைகிறார்கள். அந்தவகையில் ஈழத்தில் நல்லை நகரில் நாவலர் பெருமான் வருகின்றார். அவரின் அடிபற்றி எங்கள் சைவத்தின் கொழுந்து , சைவ வழி பற்றிட வருகின்றார் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டி.

காரைக்கால் அம்மையார், திலகவதியார், மங்கையற்கரசியார், வழியில் பயணப்பட வந்தமை கின்றவராய் எங்கள் தமிழ்ச் செல்வி தங்கம்மாவைப் பார்க்கின்றோம். முன்னவர்கள் வாழ்ந்த காலமும் , சூழலும் வேறாகும். அதனால் அவர்களின் செயற் பாடுகளும் அக்காலத்துக்கு இயைபானதாக ஆகியி ருந்தது. ஆனால் தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்கள் வாழ்ந்த காலமும் , சூழ லும் – அவரின் செயற்படுகின்ற பாங்கைத் தீர்மானித்தது என்பதை மனமிருத்துவது முக்கியமாகும்.

சாதாரண குடும்பத்தில் சாதாரண பிள்ளை யாகவேதான் தங்கம்மா பிறக்கிறார். அவர் பிறக்கும் வேளை எந்தவொரு அதிசயங்களோ , அற்புதங்களோ நிகழவில்லை. சாதாரணமாகவே பிறந்தார். சாதார ணமாகவே படித்தார். சாதாரணமாகவே ஒரு ஆசிரியர் வேலையும் பார்த்தார். ஆனால் அவர் மற்றவர் களைப்போல் " சாதாரணமானவர் அல்ல, சாதிக்கப் பிறந்த சன்மார்க்க நங்கை" என்பதை இறைவன் ஏற்கனவே அவரின் பிறப்பில் எழுதி வைத்துவிட்டான் என்பதுதான் யதார்த்தமாகும்.

இப்படியானவர்களைத்தான் "கருவிலே திருவுடை யார்", "வரம்பெற்று வந்தவர்" என்று வியந்து நிற்கிறார்கள் போலும். வரம் பெற்று வந்த காரணத்தால் , தங்கம்மா அப்பாக்குட்டி, தம் காலத்தில் செய்ய வேண்டிய சிறப்பான அத்தனையும் செய்து பயன் மிக்கவராய் ஒளிவிட்டு நின்றார் என்றால் அது மிகையாகாது.

தமிழ்ச் செல்வி தங்கம்மா அவர்களைப் பல பரிணாமங்களில் பார்ப்பதுதான் உகந்ததாகும். சைவத்தை நன்கு கற்று சைவப் புலவர் ஆகுகின்றார். தமிழை முறையாகக் கற்று தமிழ்ப் பண்டிதர் ஆகுகின்றார். அத்துடன் ஆசிரிய பயிற்சியையும் பெற்று நல்லாசிரியராகவும் மிளிர்கிறார்.

இலங்கையின் பல பகுதிகளில் கற்பித்து யாவரையும் நன்கு அறிந்தும் கொள்ளுகின்றார். கற்பிக்கும் வேளை கருத்தூன்றிக் கற்பித்து கற்கின்றவர்கள் மனத்தில் நற்கருத்துக்களையும் ஊன்றுகின்றார். வேலைபார்த்த இடமெல்லாம் வேலையெனக் கருதாமல் அதனை ஆத்மார்த்தப் பணியாக அகமிருத்தி மேற்கொள்கின்றார். ஆசிரியப் பணியை அகமிருக்கும் அழுக்குகளை அகற்றிடும் பணியாகவே எண்ணிச் செயற்படுகின்றார். இதனால் அன்னையாய் , அறிவூட்டும் ஆசானாய் மதிக்கவும்படுகிறார் என்பதை மனமிருத்துவது அவசி யமாகும்.

அழகானவர்; அறிவானவர் தங்கம்மா. இளமையில் அவரைப் பார்த்தவர்கள் அவர் வசம் ஈர்க்கப்படுவர். சாதாரண பெண்தானே அவரும். ஆனால் அவர் மனத்தில் லௌகீகம் பற்றிய சிந்தனைக்கே இடம் இல்லாமல் போய்விடுகிறது. அவர் சிந்தனை எல்லாம்

தொடர்ச்சி▼

# சைவத்தின் வழிநடந்த தமிழ்ச் செல்வி தங்கம்மா

தொடர்ச்சி▲

சைவம் பற்றியும், சன்மார்க்கம் பற்றியும், சமூகம் பற்றியுமே சென்று விடுகிறது. இல்லறத்தில் தங்கம்மா இணைந்திருந்தால் சாதாரண ஒரு குடும்பத் தலைவியாய் , பிள்ளைச் செல்வங்க ளுடன் வாழும் நிலைதான் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவரிடம் எழுந்த அரிய சிந்தனையால் அனைவருக்கும் அன்னையாய் , அநேக குழந்தைகளின் வழிகாட்டியாய், சமுதாயத்தின் சேவகியாய் , சைவத்தின் காவலராய், தமிழ் பெரும் ஆளுமையாய் , யவரும் வியந்து பார்த்து வாழும் வாய்ப்பு வாய்த்தது என்பதை எவருமே மறுத்துரைத்து விடல் முடியாது.

தெல்லிப்பளையில் பிறந்தவர்தான் தங்கம்மா. அவரின் முன்வினைப் பயனாகவேதான் சாதாரண சிறிய கோவிலான துர்க்கை அம்மன் கோவில் தென்படுகிறது. அந்தத் துர்க்கை அம்மாதான் எங்கள் தமிழ்ச் செல்வி தங்கம்மாவின் வாழ்வி னையே மாற்றப் போகிறார் என்பதை எவருமே எதிர்பார்க்கவே இல்லை. ஏன் தங்கம்மா எதிர்பார்த்திருக்கவும் மாட்டார். இதைத்தான் திருவருள் என்று எண்ணத் தோன்றுகிறது. தெல்லிப்பளையில் பிறந்தவரின் சமய, சமூக, ஆன்மீக, அறப்பணிகள், தமிழ்ப் பணிகள், அத்தனையும் ஆரம்பிக்கும் இடமாக அன்னை துர்க்கையின் ஆலயமே நிலைக்களனாக அமைகிறது, அமைந்தது என்பதை அனைவரும் அகமிருத்துவது மிக மிக அவசியமாகும்.

சாதாரண தமிழ்ப் பண்டிதர், சைவப்புலவர், பயிற்றப்பட்ட ஆசிரியர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி "துர்க்கா துரந்தரி " என்று போற்றப்படுவதற்கும் நிலைக்களனே தெல்லிப்பளையில் சாதாரணமாய் இருந்த துர்க்கை அம்பாளின் சிறிய கோவிலே ஆகும். தங்கம்மா துர்க்கை அம்பாள் கோவிலைக் கண் டதுதான் அவரின் வாழ்வில் மிகப் பெரிய தருணம், மிகப்பெரிய திருப்பு முனை என்று எண்ண முடிகிறதல்லவா.

நாவலரை நன்றாகவே மனத்தில் பதித்திருக்கிறார் தங்கம்மா. அதனால் அவரின் தடம் பற்றி நடக்க முற்பட்டிருக்கிறார். நாவலர் பெருமானின் பின்னர் புராணங்கள், திருமுறைகள் , சைவசமயச் சிந்தனைகளைக் கோவில்களில் யாவரும் கேட்டிடப் பிரசங்கம் செய்யும் பாங்கு இல்லாமல் போய்விட்டது என்று தான் சொல்ல வேண்டும்.

அத்தகைய சூழலில் தங்கம்மா அப்பாக்குட்டி அந்தப் பணியை ஆத்மார்த்தமாய் அகமிருத்தி ஆலயங்கள் தோறும் இடைவிடாமல் பிரசங்களை அழகு தமிழால் தக்க எடுத்துக் காட்டுக்களுடன் மிகவும் பக்குவமாய் செய்தமை மீண்டும் நாவலர் யுகம் தோன்றிவிட்டதோ என்றே எண்ணிட வைத்தது. தங்கம்மாவின் சைவப் பிரசங்கங்கள் இலங்கையில் எல்லாக் கோவில்களிலும் இடைவிடாது இடம்பெற்றன. இலங்கை மட்டும் அல்லாது இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து நாடுகளிலும் அவரின் பிரசங்கங்கள் இடம்பெற்றன என்பதை மனமிருத்துவது அவசியமாகும்.

பேச்சுடன் நின்று விடாமல் எழுத்திலும் தன்னுடைய ஆளுமை யைப் பதித்தும் நின்றார். "கந்த புராணச் சொற்பொழிவுகள்" நூல் மிகவும் கருத்தாளம் மிக்க நூல். இந்த நூலின் பெறுமதியை வியந்து பாராட்டி இலங்கை அரசு 1978 ஆம் ஆண்டு சாகித்திய மண்டல விருதை வழங்கியது.

தங்கம்மா அப்பாக்குட்டி சைவசமயத் தொண்டையும் சொற்பெருக்காற்றும் ஆற்றலையும் வியந்து மதுரை ஆதீனத்தால் " செஞ்சொற் செம்மணி" பட்டம்



1970ஆம் ஆண்டு 'சிவத்தமிழ்ச்செல்வி' என்ற பட்டத்தை ஈழத்துச் சிதம்பரம், காரைநகர் மணிவாசகர்சபை அளித்தபோது...

வழங்கப்பட்டது. காரைநகர் மணிவாசக சபையால் "சிவத்தமிழ் செல்வி", தமிழ் நாடு இராகேசரி பீடாதிபதியால் "சைவதரிசினி" ,சிலாங்கூர் மலேசியா இலங்கைச் சைவச் சங்கத்தால் "திருவாசகக் கொண்டல்" , வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தால் "திருமுறைச் செல்வி", ஈழத்துச் சிவனடியார் கூட்டத்தால் "சிவமயச் செல்வி" அகில இலங்கை இந்து மாமன்றத்தால் "சிவஞான வித்தகர்", " தெய்வத் திருமகள்" ஆகிய இரண்டு விருதுகள், துர்க்காதேவி தேவஸ்தானத்தால் "துர்க்கா துரந்தரி", மாதகல் நுணசை முரு கமூர்த்தி தேவஸ்தானத்தால் "செஞ்சொற் கொண்டல்" , இணு வில் பரராசசேகரப் பிள்ளையார் தேவஸ்தானத்தால் " திரு மொழி அரசி" கொழும்புக் கம்பன் கழத்தால் " கம்பன் புகழ் விருது" என எங்கள் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியை நாடிப் பட்டங்கள் வந்து குவிந்தன. அம்மா அவர் களுக்கு பட்டங்களை வழங்கிய அமைப்புகள் அத்தனையும் – பட்டங்களை வழங்கியதால் பெரும் பேற்றைப் பெற்றதாகவே எண்ணிக் கொண்டன என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ்ச் செல்வி தங்கம்மாவுக்குப் பல பட்டங்கள் வந்து அமைந்தாலும் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தால் வழங்கப்பட்ட " சிவத்தமிழ் செல்வி" என்னும் பட்டம்தான் மிகவும் சிறப்பானதாய் ஒளி விட்டு விளங்கியது எனலாம்.

தங்கம்மா என்றால் "சிவத்தமிழ் செல்வி" என்றே அனைவர் அகத்திலும் பதிந்து விட்டது என்பதை எவருமே மறுத்துரைக்க மாட்டார்கள். சிவ மயமாய் சிந்தித்து , சைவத்தைக் காத்திடும் அன்னையாய், காலத்தின் வருகையாய், ஏன் காலத்தின் காவலராய் விளங்கினார் என்பதுதான் உண்மையாகும்.

அம்மா அவர்கள் தன்காலத்தில் சைவத்தின் குரலாகவே ஓங்கி ஒலித்தார். சைவத்தின் வளர்ச்சியை இளையவர் விளங்கிடவும், சைவ நம்பிக்கை தளர்ந்தவர் நிமிர்ந்திடவும், துணிவாய் அதேவேளை மிகவும் பக்குவமாய் யாவரும் பக்குவத்தைப் பெறும் வண்ணம் பலவற்றை ஆற்றினார். பலருக்கும் நல் வழிகாட்டியாகவும் விளங்கினார்.

ஆன்மீகம் என்பது ஆலய வழிபாட்டுடன் மட்டும் நின்று விடுவதில்லை. ஆன்மீகம் என்பது அறம் சார்ந்ததாகும் என்று அம்மா வாழ்ந்து காட்டினார்கள். புராணங்கள் படிப்பதும், திருமுறைகளைப் போற்றுவதும், திருக்கோவில்களை வழிபடுவதும், நற்சிந்தனைகளைக் கேட்பதும், அத்தியாவசியம் என்று அம்மா அவர்கள் கூறினார்கள். அதே வேளை ஆதரவற்றோரைக் காப்பதும் பசிப்பிணி போக்குவதும், கல்விக் கண்ணைத்

தொடர்ச்சி▼




# சைவத்தின் வழிநடந்த தமிழ்ச் செல்வி தங்கம்மா

தொடர்ச்சி▲

திறப்பதும், நலத்தைக்காக்க வழி வகுப்பதும் அவசியமானது என்பதையும் எங்கள் தங்கம்மா எடுத்து உரைத்தார். உரைத்ததோடு நின்று விடாமல் – தானே முன் வந்து " துர்க்காபுரம் மகளிர் இல்லம்" என்னும் அமைப்பை நிறுவினார். "அன்னபூரணி" அன்னதான மண்டபத்தை அமைத்தார். அத்துடன் அமையாது "கல்யாண மண்டம்" ஒன்றையும் அமைத்தார். குறைந்த செலவில் கல்யாணங்களை நடத்துவதற்கு அதாவது வசதிகள் குறைந்தோரும் இல்லறமாம் நல்லறத்தில் இணைந்து இன்பமுற, அம்மாவின் இந்த முயற்சி பெரும்பயனை அளித்தது எனலாம். இவை அத்தனையும் ஆன்மீகமே என்பதை நாமனைவரும் மனமிருத்துவது மிக மிக அவசியமாகும்.

எங்கள் தமிழ்ச்செல்வி யாழ். மண்ணின் மாசில்லா மங்கை, சைவத்தின் காவலர், சன்மார்க்க வழிகாட்டி, செந்தமிழ்ப் புலவர் சிறப்புடை ஆசானுக்கு – அமெரிக்க ஹவாய் சிவாய சுப்பிரமணிய சுவாமி ஆசிரிமம் 2005 ஆம் ஆண்டுக்கான "சிறந்த இந்துப் பணி" விருதும், 2003 இல் வவுனியாவில் இடம் பெற்ற தமிழ் இலக்கியப் பெருவிழாவில் "வட கிழக்கு மாகாண ஆளுனர் விருதும்" வழங்கப்பட்டது. அது மட்டுமல்லாது இலங்கை அரசால் "கலாசூர" விருதும் வழங்கப்பட்டது.

அம்மாவின் அனைத்துப் பணிகளையும் கருத்தில் கொண்டு கல்வி நிலையில், கற்பித்தல் நிலையில் உயர்ந்தோங்கி நிற்பது என்று எல்லோர் மனத் திலும் இடம் பெற்றிருக்கின்ற பல்கலைக்கழகமானது அதாவது யாழ். மண்ணில் பொன்னம்பலம் இராமநாதப் பெரியோனின் கனவாய் இருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாய் பேருருப் பெற்ற பல்கலைகழகம் எங்கள் சிவத்தமிழ்ச் செல்விக்கு " கலாநிதிப் பட்டத்தை" வழங்கி கௌரவப்படுத்தியது. இந்தப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வழங்கியதால் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகமே பெரும் பேற்றைப் பெற்றுக் கொண்டது.

சைவத்தின் காவலராய் , தமிழ் மொழியின் ஆளுமையாய், எங்கள் நாவலர் பெருமான் திகழ்ந்தார். அவரின் தடம்பற்றி நடந்த தமிழ்ச் செல்வி தங்கம்மா சைவத்தையும் தமிழையும் கண்ணாகவே கருதினார். நாவலர் பெருமான் சமயப் பணியோடு சமுகப்பணி யையும் மேற்கொண்டார். அம்மாவும் அவ்வழியில் பயணப்பட்டார் என்பதும் கருத்திருத்த வேண்டியதேயாகும்.

நாவலர் பெருமானைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். அவர் நடந்த மண்ணில் நடந்தும் இருக்கிறோம்.அவரின் ஆற்றல்களை அவரின் வரலாற்றால் அறிந்தும் இருக்கிறோம். அவர் இந்த மண் ணில் வாழ்ந்த காலத்தில் நாம் பிறக்கும் பாக்கியம் எமக் கெல்லாம் வாய்க்கவில்லை. ஆனால் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி காலத்தில் நாமெல்லோரும் வாழ்ந்தோம், அவருடன் பழகினோம், அவரின் சொற்பொழிவுகளைக் கேட்டோம்.

அவரின் ஆன்மீகப் பணிகளை, அறப்பணிகளைக் கண்டோம், வியந்தோம் என்பதே பெரும்பேறு என்றுதான் எண்ண வேண்டும். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்குப் பின் அவரை ப்போல் ஒரு ஆன்மீக, அறச்சிந்தனை மிக்க அருள் நிறைப் பெண்மணி யாழ். மண்ணுக்கு வாய்க்கவே இல்லை என்பதை எவருமே மறுத்து உரைத்திடல் முடியாது.

சைவத்தின் வழிநடந்தத் தமிழ்ச் செல்வி தங்கம்மா, ஆண்டவன் அருள்பெற்ற அருளாளர். சைவத் தமிழ் வரலாற்றில் சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி என்னும் பெயர் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படுவது மிக மிக அவசியமானதாகும்.

# இன்றைய ராசி பலன்கள் -15.06.2024




இன்றைய நாளைக் கையாள்வது கடினமாக இருக்காது. வளர்ச்சி குறித்து சுதந்திரமாக முடிவெடுக்கும் உறுதியான மனநிலை காணப்படும். சிறிது முயன்றால் வெற்றி காணலாம்.

பணியிடத்தில் சிறந்த நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு வலுப்படும்.இன்று பண வரவு காணப்படும். அதிர்ஷ்டம் காணப்படும். இன்று பணத்தை சேமிப்பீர்கள். உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும் என்றாலும் உறுதியுடனும் கவனமுடனும் செயல்பட்டு அதனை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். பயணம் கடினமாக இருக்கும் மற்றும் நீங்கள் சில அதிருப்தியான சூழ்நிலையை சந்திப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வதன் மூலம் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகம் காணப்படுவதால் சேமிக்க இயலாது. இன்று பதற்றம் காணப்படும். எனவே இன்று இதனை தவிர்த்தல் சிறந்தது.




இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும்.




இன்றைய நாள் உங்களுடைய இலக்குகளை அடைய சரியான முயற்சி எடுக்க உகந்த நாள். உங்கள் செயல்களை எளிதாக செய்வீர்கள். உங்கள் உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் நன்மை கிடைக்கும். உங்கள் செயல்திறன் உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். இதனால் மிகுந்த திருப்தி ஏற்படும்.

நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். நல்ல சேமிப்பு நிலையை பராமரிப்பீர்கள். இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று கடினமான சூழ்நிலைகளை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டிய நாள். இன்று கோபம் மற்றும் பதற்றத்திற்கு ஆளாவீர்கள். அமைதியும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாகும்.

அசௌகரியம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். தோல் சம்பந்தமான பிரச்சினைகளும் தூக்கமின்மையும் காணப்படும்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்றுவது விளைவுகளை மேம்படுத்த உதவிகரமாக இருக்கும். சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

நீங்கள் விஷயங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கப்படும். இனிமையான வார்த்தைகளைப் பேசுவதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையுடன் இவைகளை சமாளிக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு அட்டவணையிட்டு பணியாற்றுவது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்ய முற்படலாம். அமைதியான போக்கை மேற்கொண்டு உறவில் நல்லிணக்கத்தை தக்க வையுங்கள்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதற்றம் காரணமாகத் தலைவலி ஏற்படலாம்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி பெற அதிக முயற்சி எடுக்க வேண்டும். இன்று ஓய்வின்றி செயலாற்றுவீர்கள். செயல்களை எளிதாக கையாள்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறம்பட செய்து முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் இருவரும் சேர்ந்து பொழுதுபோக்கு விஷயங்களைக் கண்டு மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 15-06.2024

## தனுசு

இன்று உங்கள் திட்டங்களில் பலன் கிடைக்கும் இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடச் சூழல் சிறந்த முறையில் செயலாற்றும் வகையில் இருக்கும். உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பையும் புரிந்துணர்வையும் பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் இந்த சகஜமான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அமைதி யான குடும்பச் சூழல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## மகரம்

இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்ட மிடுதல் மற்றும் யுக்திகளை கையாள் வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதி யாக இருந்து பதற்றத்தைத் தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பனியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதற்றமும் ஏற்படும்.இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.

## கும்பம்

இன்று தேவையற்ற மனக் குழப்பங் கள் சுமையாக இருக்கும். நம்பிக்கையுடன் இருந்தால் நன்மை காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரும். கவனமாக பணியாற்றினால் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையிடம் குழப்பமான மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மனதை அமைதியாக வைத்துக் கொண்டு உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை அனுப வியுங்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பின் காரணமாக ஏமாற்றம் நிறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## மீனம்

இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தாமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.





